சுதேசமித்திரன்
5-12-48
அணா
4

IMPORTANT TO MOTHERS
WOODWARD'S CELEBRATED
தாய்மார்கள் அறிவர்
:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்
WOODWARD'S
GRIPE WATER
keeps baby well
I-WW108-111
W. WOODWARD LTD LONDON. ENGLAND

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

உங்கள் எதிர்காலம்

பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8, ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக்கு ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதியனுப்ப ரூ. 5. த.செ.தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?
இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ் : வால்டேர், ஆர். எஸ். | லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30மாத்திரை சீசா 1 ரூ.7.

மஹா பில்வாதி லேகியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷ பலனே வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ஸ்ரீமே. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

காச குலாந்தகம்

சரீரம் மெலிந்து, அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து, பார்வை குன்றி, கஷ்டப்படும் அன்பர்களே!

சுவாசக் குழாய்களிலும், சுவாசப் பைகளிலும் தடைபட்டு நிற்கும் கபம் விலகிப்போவதைத்தவிர, நெஞ்சிலும், விலாப்பக்கத்திலும் வலி, இருமல், இழுப்பு, பலக்குறைவு, மார்பு அடைப்பு, தலைவலி, காய்ச்சல், குரல் அடைப்பு, நாசி வழி ஜலம் வடிதல், க்ஷயம், சுவாசக் குழாய்களிலிருக்கும் பழுப்பு, கபத்தாலுண்டாகும் இழுப்பு முதலிய சுவாசப்பையை ஒட்டிய சகலவித நோய்கள் யாவற்றையும், ஆதவனைக்கண்ட பனிபோல் விரைவில் மாற்றிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கடின பத்தியமில்லை.

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM.

189, வக்கீல் புது தெரு - P. B. No. 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம். 20, கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58E, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர். 179, SEA ST., COLOMBO.

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனுர் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்:

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

எலக்ட்ரிக் சாமான்கள்

ENGLISH MAKE

Switches Porcelain Base.	Dozen Rs.	19-8-0
Staircase Switches	,, ,,	36 0-0
Holders Bakelite	,,	8 8 0
Cealing Roses Bakelite	,,	8-12-0
Wallplugs & Pins Bakelite	,,	15 8-0
C.M.A. 1/18 V.I.R. COILS 100 yards		15-8 0
,, 14/36 Flexable wires	,,	20-0 0
15 to 30 walls India Bulbs Dozen		18-8-0
15 amp. Ironclad Main Switches each		11-0-0
9" O. C. Braket & Holder	,,	2-8 0
Kantark 15 amp. Fuse units	,,	3-0-0
11 m-m pipes. 10 Feet	,,	3-8 0
2½ amp. A. C. Venner Meters	,,	50-0 0
Transformer lights GEC	,,	8-0-0
Langham Shades "Colour Border"	,,	2-8-0

மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும்.

M. R. PARTHASARATHY IYENGAR

Electrical Dealers

29A, T. P. KOIL STREET

TRIPLICANE :: MADRAS. 5

முன்னணி

மாத மிரு முறை

★

சினிமா & போட்டி
விமர்சனப் பத்திரிகை

★

தனிப்பிரதி விலை அணு இரண்டு.
ஆண்டு சந்தா ரூபாய் மூன்று.
ஆறுமாதசந்தா ரூபா ஒன்னரை.

*10-12-48*ல் முதல் வெளிவருகிறது

ஆனந்தவிகடன் & கிருஷ்ணா போட்டிகளுக்கு விரிவான விமர்சனம் காணலாம். பிரதி ஒன்றுக்கு அணு 5 வீதம் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள்மட்டும் எழுதவும்.

விவரங்களுக்கு ;

மானேஜர்,

முன்னணி பதிப்பகம்,

143, வடக்கு மாசி வீதி, மதுரை.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

S.A.H. TRADE MARK

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - ***S. I. R.***

ரூ. 500 இனம்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த சித்த யந்திரம்.

சக்தி வாய்ந்தது. இந்த "கவசத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் நீர் விருப்பும் (ஆண், பெண்) எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனம்.

செப்பு மூடியுடன் ரூ. 5
மூன்று வாங்கினால் ரூ. *12.*

வெள்ளி மூடியுடன் ரூ. 7.
மூன்றுக்கு ரூ. *18.*

தங்க மூடியுடன் ரூ. *15.*
மூன்றுக்கு ரூ. 40.

Sri Kamrup Kamakshya Ashram,
199/B, P.O. Rajdhanwar, (Hozaribagh)

சுதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

காமினியா ஆயில்

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285. Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா

ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர்--செகந்திராபா[illegible]
பெஜவாடா — மதுரை

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ கார்த்திகை௴ 20௳ ★ 1948-௵ டிசம்பர்௴ 5௳ No. 45

இலங்கை அநீதி

கடல் தாண்டிச் சென்ற இந்தியர் உழைப்பின் பயனாக வளம் பெற்ற பகுதிகள் பல. அவற்றுள் இலங்கையும் முக்கியமானது. என்னதான் இன்று சிங்களவர் இந்தியர் மீது வெறுப்பைக் காட்டினாலும் கூட அவர்கள் இந்த உண்மையை ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. இந்தியர்கள் ஒரு பகுதியின் செழுமைக்கு உதவியிருக்கிறார்கள் என்ற காரணத்தால் மட்டும் அவர்களுக்குப் பிரத்யேகமான உரிமைகளை வழங்கிவிட வேண்டுமென்று யாரும் இங்கு சொல்லவில்லை. ஆனால், நியாயமாக இந்தியர்கள் கோரும் உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்பதுதான் இன்று கூறப்படும் கட்சி.

இலங்கை சர்க்காருக்கு இந்த நியாயத்தைப் பற்றியோ, தனக்கு அருகே உள்ள இந்திய நாட்டினருடன் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்பதுபற்றியோ துளிக்கூட சிரத்தையிருப்பதாகத் தோன்றக் காணோம். சமீபத்தில் இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித நேருவுக்கும், இலங்கைப் பிரதம மந்திரிக்கும் இந்தியர் பிரஜா உரிமையைக் குறித்து நடந்துள்ள கடிதப் போக்குவரத்தைக் கவனித்தவர்களுக்கெல்லாம் அவ்வுண்மை புலப்பட்டிருக்கும். இந்தியருடைய குறைந்தபட்ச கோரிக்கையைப் பூர்ணமாக மறுதளிக்கும் வகையில் இலங்கை சர்க்கார் ஓர் மசோதாவைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். பண்டித நேரு இந்த அநீதியை எடுத்துக் காட்டி எழுதியதற்கு இலங்கைப் பிரதம மந்திரி கொடுத்திருக்கும் பதில் மிக்க விசித்திரமானது.

இந்தியர்களில் பெரும்பகுதியாரைத் துரத்தியடிப்பதற்கு இதைக் காட்டிலும் அநீதமாக வேறு ஒரு நடவடிக்கையை எடுத்துக்கொள்ள முடியுமா என்பது சந்தேகம். அந்த ரீதியில் ஓர் மசோதாவைத் தயார் படுத்திவிட்டு, இந்தியாவுடன் அன்னியோன்ய பாவம் பூண்டிருக்க வேண்டுமென்ற வேட்கையினால்தான் தாங்கள் கூடியவரையில் விட்டுக் கொடுத்திருப்பதாக இலங்கைப் பிரதம மந்திரி சாதிக்கிறார். இந்தத் தாராள மனப்பான்மையை வெளியிடும் விசித்திர மசோதாவைத்தான் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்!

இவ்விஷயத்தில் இலங்கை அதிகாரிகள் சாதாரண நேர்மை உணர்ச்சியுடன் நடந்துகொள்வதாயின், அங்கு குறைந்தது ஐந்து வருஷ காலம் வசித்து இனியும் அந்நாட்டையே நிரந்தர வாசஸ்தலமாகக் கொள்ள எண்ணும் இந்தியர் அனைவருக்கும் பிரஜா உரிமை வழங்குவதென்ற யோசனையை ஆட்சேபிக்கக் காரணமில்லை. மேற்குறித்த காலத்தை ஏழு வருஷமாக நீடிக்கவும் இந்திய சர்க்கார் தயாராயிருக்கின்றனர். எனினும், அவ்விந்தியரை விவாகமானவர்களென்றும் ஆகாதவர்களென்றும் பிரித்து, முன்னவர் சுமார் பதினொரு வருஷ காலமும் பின்னவர் சுமார் பதினான்கு வருஷ காலமும் இலங்கையில் வசித்தவர்களாயிருந்தால்தான் அவர்கள் பிரஜா உரிமைக்கு மனுப் போடலாமென்று தற்போதைய மசோதா விதிக்கிறது. இது அநியாயமென எடுத்துக் காட்டினால், இதுதான் நியாயமென்றும், இதை மாற்றுவது

சாத்தியமல்லவென்றும் ஸ்ரீ ஸேனாநாயகா பதில் சொல்லுகிறார்!

இம்மசோதாவில் வாச காலத்தைப்பற்றிய அக்கிரமம் மட்டுமில்லை. அந்த யோக்கியதையுள்ளவர்களிலும் அநேகருக்குப் பிரஜாஉரிமை மறுக்கக்கூடியவாறு பல நிபந்தனைகள் மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, அவ்வுரிமை பெற எண்ணுவோர் தங்கள் காலட்சேபத்துக்குத் தக்க வகையிருப்பதாக நிரூபிக்க வேண்டும்! இச்சமயத்தில் இலங்கை சர்க்கார் இலாகாக்களிலும், வேறு துறைகளிலும் நெடு நாளாக வேலை செய்து வந்த பல இந்தியத் தொழிலாளர் துரிதமாக நீக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதொரு புறமிருக்க, தக்க காலட்சேப வகையுள்ளோர் காட்டக்கூடிய ஆதாரங்களையும் அதிகாரிகள் எளிதில் நிராகரித்துவிடக்கூடும். பிரஜா உரிமை கோருவோர் இலங்கை சமுதாயச் சட்ட திட்டங்களுக்கு ஒத்து வாழக்கூடியவர்களாக இருக்க வேண்டுமென்பது இன்னொரு நிபந்தனை. மைனரிட்டிக்கு ஒரு பாதுகாப்பும் கிடையாது என்பதுமட்டுமின்றி, அவர்கள் மெஜாரிட்டியில் மறைந்துவிட வேண்டுமென்பதுதான் அதன் பொருள். ஒன்றன்பின்னொன்றாகப் பல அக்கிரமத் தடைகளை ஏற்படுத்தி, பிரஜா உரிமை பெறக்கூடிய இந்தியர்களின் எண்ணிக்கையை அடியோடு குறைத்துவிட வேண்டுமென்பதே மசோதாவின் கருத்து என்பதில் சந்தேகமில்லை.

இவ்வளவு தடைகளையும் ஒரு சில இந்தியர் தாண்டுவதாகவே வைத்துக்கொண்டாலும், இறுதியாக அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பிரஜா அந்தஸ்தின் தன்மையென்ன? அது மற்றப்பிரஜைகளுக்கு குறிப்பாக சிங்களவர்க்கு உள்ளதுபோன்ற பிரஜா அந்தஸ்தல்ல. அவ்விந்தியர் இரண்டாந்தரமான பிரஜைகளாகவே மதிக்கப்படுவர். முக்கியமாக சமுதாய க்ஷேமத்துக்காக சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் பலவற்றில் அவ்விந்தியருக்கு இடங் கிடையாது. தங்கள் திட்டங்கள், குறிப்பாக ஏழை மக்களைக் கைதூக்கிவிடுபவையாயிருக்க வேண்டுமென்று இலங்கை சர்க்கார் விதிப்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால், பொதுவாக ஏழைகளின் பொருளாதார நிலையை உயர்த்த வழி தேடும் கருத்துடன் அமைந்த ஒரு மசோதா அல்ல இது. ஏழைகளில் பாகுபாடு செய்து அவர்களில் இந்தியருக்கு எவ்வித அனுகூலமும் கிடைக்க விடக்கூடாதென்ற எண்ணத்துடனேயே இம்மசோதா உருவாகியிருக்கிறது. ஒரு சாராரைத் தங்கள் பிரஜைகள் என்று ஒப்புக்கொண்ட பிறகு, பொருளாதார நிலையைத் தவிர வேறு காரணங்களுக்காக அவர்களுக்கு எத்தகைய அனுகூலமும் மறுப்பது அவர்களது பிரஜா அந்தஸ்தை ஒரு கேலிக்கூத்தாக்குவதாகும்.

இலங்கை சர்க்கார் நியாயமான வாதமெதற்கும் கட்டுப்பட மறுக்கின்றனர். இந்தியாவின் நீடித்த நேசத்தைக் கருதியாவது அக்கிரமப் பிடிவாதத்தைக் கைவிடுங்கள் என்று நமது பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்கும் அவர்கள் செவிசாய்க்க மறுத்துவிட்டார்கள். இந்தியாவும், இலங்கையும் சுதந்திரம் பெற்றுவிட்ட நிலையில், பொதுவான பிரச்னைகள் எளிதில் தீரக்கூடுமென்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், தங்கள் சுதந்திரத்தை இந்தியா விஷயத்தில் துஷ்பிரயோகம் செய்வதே தங்கள் முதல் வேலையென்று ஸ்ரீ ஸேனாநாயகா கோஷ்டியினர் முடிவு செய்துவிட்டதாகத் தோற்றுகிறது. நியாயத்தையோ, இந்தியாவின் நேசத்தையோ தாங்கள் பொருட்படுத்தப்போவதில்லையென்று அக்கோஷ்டி தெளிவாக்கிய பின் அவர்களுக்கு எவ்விதத்திலும் உதவி புரிவது தங்கள் கடமையல்ல என்று இந்திய சர்க்கார் எண்ணுவது இயற்கையே. இதன் விளைவு யாரை அதிகமாகப் பாதிக்குமென்று ஸேனாநாயகா கோஷ்டியினர் எண்ணிப் பார்த்ததாகவே காணோம்.

தாகசாந்தி

கு.சு. நடராஜன்

என் கற்பனை உலகிலே கடவுள் ஒரு நாள் என் முன் தோன்றி புன்சிரிப்புடன் 'மகனே, இந்த உலகில் நீ உண்ண உணவும் உனக்கு உதவியாக பறவை பிராணிகளும் இயற்கையும் அளித்திருக்கிறேனே, நீ எனக்கு ஏதாவது கைம்மாறு செய்யமாட்டாயா' என்று கேட்டார்.

நான் உடனே கன்னத்தில் இரண்டு போட்டுக்கொண்டு வணங்கிவிட்டு,

'பகவானே! தங்களுக்கு ஆயிரம் கோயில்கள் கட்டுகிறேன். வைரக் கிரீடம் சாத்துகிறேன். (கற்பனை உலகில் நான் ஒரு கோடீஸ்வரன் என்று தான் நம்பியிருந்தேன்.) 10 வீசை கற்பூரம் ஏற்றி 1008-தேங்காய்களும் உடைக்கிறேன்' என்றேன்.

ஆண்டவன் என்னை அலட்சியமாகப் பார்த்துவிட்டு,

"அப்பனே! இவையெல்லாம் நான் கொடுத்ததுதானே. நீயாக எனக்கு என்ன தருவாய்?'' என்றார்.

நான் வாயடைத்துப்போனேன்.

கடவுள் உடனே "மகனே, பசி என்று எவரேனும் உன்னிடம் வந்தால் சோறு போடு. தாகம் என்று கேட்டால் தண்ணீர்கொடு. இது ஒன்றைத்தான் உன்னிடமிருந்து நான் கேட்பது'' என்று கூறிவிட்டு மறைந்துவிட்டார்.

இந்த உத்திரவு எவ்வளவு உண்மையாகிவிட்டது என்பதை என் வாழ்க்கையில் ஒருநாள் உணர்ந்தேன்.

* * * *

நான் ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டராகையால் கிராமம் கிராமமாக தணிக்கை செய்து வந்தேன். அன்று அமாவாசை இருள் எங்கும் கவிந்திருந்தது. தவிர கருமேகங்களால் வானம் மேலும் இருண்டிருந்தது.

பக்கத்து ஊரில் வேலையை முடித்துவிட்டு தனியாக அடுத்த ஊருக்குப் புறப்பட்டேன். நான் மலை வழியாக 7-மைல் தாண்டியாக வேண்டும். வழியில் கடுமையான மழையும் பெய்யவே இருட்டில் வழி தவறி எங்கேயோ போய்விட்டேன். அந்த கொடிய நேரத்தில் இன்னது செய்வது என்று தோன்றாமல் ஒரு மரத்தடியில் ஒதுங்கினேன்.

எங்கேயோ தொலைவில் ஒருசிறு விளக்கின் ஒளியைக்கண்டதும் தான் கொஞ்சம் உயிர் வந்தது. அது சமீபத்திலிருப்பதுபோல் தோன்றினாலும் போகப் போக வழி வளர்ந்து கொண்டே இருந்தது. எனினும் தைரியத்தை விடாமல் அவ்விளக்கு இருந்த குடிசைக்கு வந்து சேர்ந்தேன்.

'ஐயா' என்று மெள்ள கூப்பிட்டேன். 'யாரது?' என்று கேட்டுக்கொண்டே ஒரு வயதான கிழவர் வந்தார். அவருடன் உடம்பை உதறிக்கொண்டு ஒரு நாயும் வந்தது.

என் கதியை அவரிடம்சொன்னவுடன் அவர் என்னை உள்ளே அழைத்துச் சென்றார். நனைந்த உடைகளை அகற்றிவிட்டு கிழவர் காட்டிய கட்டிலில் உட்கார்ந்து கொண்டேன். அதற்குள் கிழவர் அங்கிருந்த குப்பைகளைக்கட்டி ஒரு கணப்பு தயாரித்துவிட்டார். குளிரால் நடுங்கிப்போன உடல் சற்று சூடேறியது.

கிழவர் ஒரு சட்டியிலிருந்து கொஞ்சம் நிலக்கடலையை என்னிடம் கொடுத்து.

'ஏதோ என்னாலான அற்ப ஆகாரம்., இந்த ஏழையிடம் வேறு ஒன்றும் இல்லை, ப்ரபு' என்று குழைவாகச்சொன்னார்.

"பரவாயில்லை பெரியவரே! இந்த வேளையில் நீங்கள் அன்புடன் கொடுக்கும் எதுவும் எனக்கு அமுதமாகவே இருக்கிறது'' என்றேன். உண்மையில் எனக்கு அந்தக்கொடிய பசியில்இதைவிட வேறு என்னவேண்டும்?

'கொஞ்சம் இருங்கள்' என்று கூறி கிழவர் பின்புறம் போனார். மீண்டும் ஒரு பாத்திரத்துடன் வந்து,

'இந்தாருங்கள் பசும்பால். களைப்புத் தீர குடியுங்கள்' என்றார்.

அதையும் குடித்தவுடன்தான் என் களைப்பு பூராவும் நீங்கியது.

"பாவம் மிகுந்த களைப்புபோலிருக்கிறது. எங்கிருந்து வருகிறீர்கள்?''

நான் என்னைப்பற்றி அவரிடம் சொன்னேன்.

"ஆஹா. நான் என்ன பாக்யம் செய்தேன். இந்தக் குடிசைக்குத் தாங்கள் வர நான் கொடுத்து வைத்திருக்கிறேன்.''



'இல்லை. பெரியவரே! நீங்கள் இல்லாவிடில் என் கதி என்னவாயிருக்கும்?'

"அப்படிச் சொல்லாதே அப்பா. இதில்தான் கடவுள் அருள் இருக்கிறது. இப்படிதான் பல பேர் என்னிடம் வருவார்கள். இந்தக் கடலையும் பாலும்தான் என்னைப் பாபத்தினின்றும் காப்பாற்றுகின்றன."

பேசிக்கொண்டே பக்கத்தில் கட்டியிருந்த உண்டியைப் பார்த்தேன்.

'பெரியவரே! இது எதற்கு?'

"வா சொல்லுகிறேன்." என்று என்னைக் கட்டிலில் உட்காரச் செய்து விட்டு சொன்னார்.

"தம்பி நான் ஒரு தனி மனிதன். எனக்குத் தாயும்,தந்தையும் அந்த ஈசுவரன்தான். இந்த உலகத்தில் உறவினர்கள் எனக்கு இந்தப் பசுவும், நாயும் தவிர வேறு கிடையாது. இதுதான் என்னுடைய தண்ணீர் பந்தல். பகல் வேளையில் களைப்பாக வருபவர்களுக்கு நீர் மோர் கொடுப்பதுதான் என் தொழில்."

'பெரியவரே! நீர் எப்படி சாப்பிடுகிறீர்கள்?'

கிழவர் சிரித்துக் கொண்டார்.

"இதோ இந்த வண்டியில் சந்தைக்குப் போய் திரும்புகிறவர்கள் காலணா, அரையணா போடுவார்கள். அதில் நிலக் கடலை வாங்கி வைத்துக் கொள்வேன். கொஞ்சம் கடலையும் பாலும் சாப்பிட்டால் ஒரு நாள் போய்விடுகிறது"

'காசு கிடைக்காவிடில்?'

"அதற்கென்ன தம்பி. ஈசுவரன் பெயரைச் சொல்லி ஒரு கொஞ்சம் தண்ணீர் சாப்பிட்டுவிட்டால் தீர்ந்துவிடுகிறது. காசு இருக்கிற நாளில் நிலக்கடலை வாங்கிவிட்டால் உன்னைப்போல் எவரேனும் வந்தாலும் சௌகரியமாக இருக்கும். இந்தக் கடலையும் காமதேனுவும் என்னைக் கடவுள் சோதனையிலிருந்து காப்பாற்றுகின்றன, தம்பி"

"பெரியவரே,உங்களைப்போன்ற ஏழைகள் இந்த உலகில்இருக்கவே மாட்டார்கள்."

"அப்படிச் சொல்லாதே தம்பி. நானா ஏழை? இல்லை. நான் பணக்காரன். ஏழையானால் உனக்கு உதவி செய்யமுடியுமா? இதில் தான் என் இன்பம் பூராவும் இருக்கிறது தம்பி"

"நீங்கள் தனிமையிலிருக்கிறீர்களே. பயமாக இருக்காதா?"

"கடவுள் இல்லாத இடத்தில் தானே அப்பா தனிமை இருக்கிறது. இதோ என்னுடைய நாய்க்கு இதுவரை ஒரு கவளம் சோறுகூட போட்டது கிடையாது. கடவுள் இதைத்தான் எனக்குத் துணையாக வைத்திருக்கிறார்."

கிழவருடைய பெருமிதத்தை நோக்கினேன். அவர் கண்களில் தான் எவ்வளவு பெருமிதம்? எத்தகைய அடக்கமான கம்பீரம்?

கிழவரிடம் ஒரு ரூபாயை நீட்டினேன்.

"ஒரு ரூபாயா? வேண்டாம் தம்பி. அதிக பணம் உதவாது. ஒரு அணா கொடு போதும்"

'பரவாயில்லை. எடுத்துக்கொள்ளுங்கள்'!

"இல்லை அப்பா. காசு மனசைக் கெடுத்துவிடும். வேண்டாம்" என்று தடுக்கவே ஒரு அணாமட்டும் கொடுத்தேன். என்னுடைய மேல் வேஷ்டியையும் கொடுத்துவிட்டு கிழவருக்கு வந்தனம் கூறி திரும்பி வந்தேன்.

* * * *

கிழவருடைய வாழ்க்கை என் மனதில் ஒரு மாற்றத்தைக் கிளப்பி விட்டது. உத்தியோக நிமித்தம் வேறு ஊருக்குப்போய் பல மாதங்கள் கழித்து மீண்டும் இவ்வூருக்குத் திரும்பி வந்தேன்.

இங்கு வந்தவுடன் முதலில் கிழவரைக் காண என் மனம் துடித்தது. கூடை நிறைய பழங்களும் மலர்களும், புது வேஷ்டியும் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

நான் குடிசையை அடையும் தருணம் நன்றாக இருட்டிவிட்டதால் அந்த விளக்கின் ஒளி ஜோதியாகத் தெரிந்தது.

குடிசையை அடைந்தவுடன் 'பெரியவரே' என்றேன். பதில் இல்லை.

உள்ளே நுழைந்தேன். சுவரிலிருந்து வௌவால்கள் படபடவென்று பறந்துகொண்டிருந்தன. பயங்கரமான அமைதி அங்கே நிலவியது. என் குரலைக் கேட்டவுடன் அந்த நாய் என்னை நெடு

நாள் அறிந்ததுபோல் என்னிடம சுற்றி வந்தது. காமதேனுவும் காதைத் திட்டி என்னை நோக்கியது.

உள்ளே சிமெண்டில் ஒரு சமாதி கட்டப்பட்டிருந்தது. அதன் மேல் சில மலர்கள் வாரி யிறைக்கப்பட்டிருந்தன. சமாதியின்மேல் கிழவருடைய சாமான்கள் இருந்தன. அத்துடன் நான் முன்பு அளித்த துணியும்கூட பரப்பப்பட்டிருந்தது. அந்த விளக்கு மட்டும் வாடா ஒளியாக திகழ்ந்தது.

என்னையுமறியாமல் கை குவித்தேன். கிழவருடைய சாந்தமான நிலையை மானசிகத்தில் நினைத்த பொழுது என் கண்களினின்றும் இரு முத்துக்கள் பிறந்து சமாதியை நனைத்தது. நாயும் சமாதியைச் சுற்றி வந்தது. காமதேனு கழுத்தை சமாதியில் வைத்து உராய்ந்தது.

கையிலிருந்த உணவுகளை நாய்க்கும், காமதேனுவுக்கும் கொடுத்துவிட்டு புத்தாடைகளை சமாதியின் மேல்பரப்பி சில மலர்களை இறைத்தேன்.

பையிலிருந்த ஒரு ரூபாயை எடுத்தேன். ஆனால் பழைய சம்பவம் என் நினைவுக்கு வரவே ஒரு அணாவை மட்டும் எடுத்து உண்டியில் போடச்சென்றேன். உண்டி உடைக்கப்பட்டு அதில் கொஞ்சம் விபூதி இருந்தது. என் ஆவல் பூர்த்தியாகாமற்போனதை எண்ணியதும் துக்கம் நெஞ்சையடைத்தது.

திடீரென்று உள்ளே ஒரு ஆள் நுழைந்ததும் திடுக்கிட்டுப் போனேன்.

வந்தவன் "நீங்கள்தானே அந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர். உங்களைப்பற்றி கிழவர் சாகிறவரைக்கும் சொல்லிக்கொண்டிருந்தார் என்றான்.

கிழவருடைய முடிவைப்பற்றிக் கேட்டேன்.

'கிழவர் ஜுரம் என்று படுத்தாரோ என்னவோ தெரியாது அன்றைக்கு நான் சந்தையிலிருந்து திரும்பி வந்தேன். குடிசையில் ஆள் பேசும் குரல் கேட்டவுடன் உள் நுழைந்தேன். கிழவர், "தண்ணி தண்ணி" என்று முனகிக்கொண்டிருந்தார். அவர் கண்கள் சொருகியிருந்தன. இந்த நாயும் பசுவும் தவிர வேறு யாரும் அண்டையில் இல்லை. நான் தண்ணீர் இருக்கும் இடத்தைத்தேடுவதற்குள் முனகும் சப்தம் நின்று உயிரும் மெள்ள மெள்ள நின்றுவிட்டது. என்ன தான் கடைசி நேரத்தில் வந்தாலும் என்னால் ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்க முடியலீங்க. என்றான்.

'நீ இங்கே என்ன செய்கிறாய்' என்றேன்.

'கிழவர் விட்டுப்போன தண்ணீர் பந்தலை நடத்திக்கொண்டு வரேனுங்க. பக்கத்து ஊர் பஞ்சாயத்துக்காரர்கள் எனக்கு மாதம் 10-ரூபாய் கொடுக்கிறார்கள். அவர்கள்தான் இந்த சமாதியும் கட்டினார்கள்!'

சாந்தத்திற்கும், தர்மத்திற்கும் சமாதி கட்டியுள்ள அந்த தனிமையான குடிசையில் தங்க விரும்பாமல் அந்தப் புதிய ஆளை துணை கூட்டிக்கொண்டு பக்கத்து ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

ஊர் வந்தவுடன் ஆள் பல்லை இளித்துக்கொண்டு 'வரட்டுங்களா' என்றான். அவன் கையில் எட்டணா கொடுத்தேன்.

'சாமி.........' என்று மேலும் அவன் தயங்கவே ஒரு ரூபாயை அவனிடம் கொடுத்தேன். திருப்தியுடன் திரும்பினான் தண்ணீர் பந்தல் பரதேசி.

வழி நெடுக கிழவரைப்பற்றியும் என் கற்பனையில் கடவுள் சொன்னதையும் எண்ணிக்கொண்டே வந்தேன். கிழவரைக் காட்டிய கடவுள் எனக்கு இந்தப் பரதேசியையும் காட்டிய விந்தைதான் என்னே!

ஊருக்கெல்லாம் பாலும், தண்ணீரும் அளித்த கிழவருக்கு மரண தாகத்தைத் தணிக்க ஒரு சொட்டு தண்ணீர் கொடுப்பாரில்லையே!

'அந்தக் கிழவர் செய்த உதவிகளுக்கு கைம்மாறு உலகிலே இல்லையா?' என்றது என் இதயத்திலிருந்த ஒரு வினா.

ஆனால் என் கற்பனையில் தோன்றிய கடவுள் கேட்டகேள்விதான் அதற்கு விடை என்றது மற்றொரு குரல்.

பழி நீங்க வழி!

கடல்கரை ஓரமாக தேர் ஒன்று அதிவேகமாக ஓடி வருகிறது. அதன் வேகத்தைத் தடுக்க என்ன முயன்றும் முடியவில்லை. இந்தக் காட்சியைக் கடலோரத்தில் ஓங்கி வளர்ந்துள்ள புன்னைமரத்தடியில் புஷ்பம் கொய்து நிற்கும் பெண்கள் சிலர் கண்ணுறுகின்றனர். அவர்கள் ஒருவருக்கொருவர் காதோடு காதாய் ஏதேதோ பேசுகிறார்கள். தேரில் இவ்வளவு வேகமாகப் போய்க்கொண்டிருக்கும் ஆடவனைக் குறித்தேதான் அவர்கள் இங்ஙனம் ரகசியமாக உரையாடுகிறார்கள். தங்களுடைய தலைவியை யாருக்கும் தெரியாமல் இம்மாதிரி இவர் அடிக்கடி வந்து சந்தித்துப் போவதைப்பற்றி அவர்கள் வம்பளக்கின்றனர். இந்தத் தகவல் தலைவிக்கும் எட்டாமலில்லை. ஆயத்தார் யாவரும் இம்மாதிரி கொட்டிக்கொட்டி வம்பு பேசுவது குறித்து, தன்னுடைய தோழியொருத்தியிடம் சொல்லுகிறாள் தலைவி. திருட்டுத்தனமாக இம்மாதிரி எத்தனை நாள் காலந்தள்ளுவது? பழிமொழி கூறுவது அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இதையெல்லாம்பற்றி 'அவரு'க்குத் தெரியுமோதெரியாதோ! "இந்த அவச்சொற்களெல்லாம் விலக வேண்டுமானால் 'அவர்' தன்னை மணந்துகொண்டுவிடவேண்டும், தோழியரின் இத்தகைய ஏச்சுக்களுக்கும் பேச்சுக்களுக்கும் முற்றுப்புள்ளி விழவேண்டுமானால், சீக்கிரம் மணம் முடிப்பதொன்றுதான் வழி" என்று தலைவி தோழியிடம் அறிவுறுத்துவதாகவுள்ள குறுந்தொகைப் பாடல்:—



"அலர் யாங் கொழிவ தோழி பெருங்கடற்
புலவு நாறு அகல் துறை வலவன் தாங்கவும்
நில்லாது கழிந்த கல் என் கடுந் தேர்
யான் கண்டனனோ இலனோ பானாள்
ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னைத்
தாது சேர் நிகர் மலர் கொய்யும்
ஆய மெல்லாம் உடன் கண்டன்று"

—குறுந்தொகை.

அலர்—ஊராரின் பழிச்சொல்; தலைவி, தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழிக்குச்சொல்லும் பாடல் இது.

பெரு கடல்—பெரிய கடலினது; புலவு நாறு அகல் துறை-புலால் நாற்றம் வீசும் அகன்ற கடல் துறைக்கு அருகே; வலவன் தாங்கவும் - தேரை ஓட்டுபவன் தடுக்கவும்; நில்லாது கழிந்த - நிற்காமல் ஓடிய; கல் என் கடுதேர் - கல்லென ஆரவாரம் செய்து கொண்டு சென்ற தலைவனுடைய தேரை; பானாள்- நள்ளிரவிலே; ஓங்கல் வெண் மணல் தாழ்ந்த புன்னை - ஓங்கிய வெள்ளிய மணலிடத்துத் தாழ்ந்து வளர்ந்த புன்னை மரத்தினது; தாது சேர் நிகர் மலர் கொய்யும் - மகரந்தத் தூள்கள் சேர்ந்து ஒளியை வீசும் மலர்களைப் பறிக்கும்; ஆயமெல்லாம் உடன் கண்டன்று - மகளிர் கூட்டமெல்லாம்ஒருங்கே கண்டது நிலைமை இப்படியிருந்தால் பழிச்சொற்கள் எப்படி ஒழியும்?



மத்தியானம் மணி மூன்று இருக்கும். வேலைக்காரன் வாங்கி வந்திருந்த சாமான்களையெல்லாம் எடுத்து வைத்துவிட்டு, புறக்கடையில் காய வைத்திருந்த உளுந்தை, வீதியில் உட்கார்ந்தவண்ணம் புடைத்துக்கொண்டிருந்தேன். இன்னும் பத்து நாள் போனால் தீபாவளி. அதுவும் எங்கள் வீட்டில் தலை தீபாவளி. என் நாத்தனார் சீதாவுக்குச் சென்ற ஆனியில் தான் கல்யாணம் ஆயிற்று. மாப்பிள்ளையை உபசரிக்க வேண்டியது எங்கள் பொறுப்பல்லவா?

என்னவோ, என் மனதில் குதூகலமே இல்லை. அடுக்கடுக்காக வந்த துயரங்கள் என் மனத்தைக் கலக்கியிருந்தது. ராஜா மாதிரி இருந்த எங்கள் ஒரே பையன் சீனு, ஒரே நாள் காய்ச்சலில் போய்விட்டான். கல்போன்று இருந்த என் தாயார், தகப்பனார் இருவரையும் பிளேக் என்னும் கொள்ளை வியாதி ஒரே இரவில் கொன்றுவிட்டது. சென்ற ஐந்தாறு நாட்களாக என் கணவருக்கும் விடாமல் காய்ச்சல் அடித்துக் கொண்டிருக்கிறது. டாக்டர்கள் 'பாரா டைபாய்ட்' என்று சொல்கிறார்கள். என் தலை விதி எப்படியிருக்குமோ தெரியவில்லை.

"அம்மா, தாயீ.........பிச்சை போடுங்க" என்ற குரல் என் யோசனையைக் கலைத்தது.

"யாரடீது, பிச்சை கேட்க வந்த நேரத்தைப் பார்,...போடீ," என்றேன் குனிந்த தலை நிமிராமல்.

"அம்மா..." என்றாள் அவள்.

நான் தலையை நிமிர்ந்து பார்த்தேன். ஒரு சிறு பெண். பதினாறு வயசு இருக்கும். கந்தைத் துணியுடன் கையில் ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள். அவள் முகத்தைப் பாத்தால் சாப்பிட்டுக் குறைந்தது மூன்று நாளாவது இருக்கும் என்று தோன்றியது.

"சீதா, சீதா...என்று கூப்பிட்டேன்.

"ஏன் மன்னி?" என்று கேட்டபடி சீதா வந்தாள்.

"இவளைப் பார்த்தால் பாவமாயிருக்கு, இவளுக்குக் கொஞ்சம் சாதம் போடு" என்றேன்.

சீதா ஒரு தட்டு நிறைய குழம்பு சாதம் பிசைந்து வந்து அவளுக்குப் போட்டாள். பிச்சைக்காரியும் நன்றியுடன் என்னைப் பார்த்துக்கொண்டு சாதத்தைச் சாப்பிடலானாள்.

நான் அவள் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தேன். "ஏண்டி, ஒன் பேரென்னடி? உனக்குத்தான் நல்ல வலுவு இருக்கிறதே, ஏதாவது வீட்டிலே உழைத்து சாப்பிடக்கூடாதா? ஏன் இப்படிப் பிச்சையெடுக்கணும்?" என்று அவளைக் கேட்டேன்.

நான் கேட்டது அவள் மனத்தைப் பெரிதும் புண்படுத்திவிட்டது. அவள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

"அம்மா, நானும் எல்லோரையும் போல நல்ல குடியிலே பிறந்தேன். ஒரு பாவியினால் இந்தக்கதி எனக்கு வந்தது." என்று கூறி, மேலும் அழ ஆரம்பித்தாள். என் மனம் இளகிவிட்டது.

"பாவம், உன்னை இந்தக் கதிக்குக் கொண்டு வருவதிலே யாருக்கு நன்மை?" என்றேன்.

2

"அம்மா, வாசல் பெருக்கி காத்தாயி என்று சொன்னால் மருடஞ்சாவடியில் எல்லோருக்கும் தெரியும். அவள் ஒரே பெண் அஞ்சலை நான். வாசல் கூட்டி என் அம்மா வயிறு வளர்த்தபோதிலும், என்னை ஜமீந்தார் வீட்டுக் குழந்தை மாதிரிதான் நடத்தி வந்தாள். விதிக்கு நாங்கள் சவுக்கியமாய் வாழுவது மனம் பொறுக்கவில்லைபோன்று இருக்கிறது. எங்கம்மா வேலை செய்துகொண்டிருந்த இடத்தில் ஒரு வைரப்பதக்கம் காணோம். ஏழை என்பதால் ஒருத்தி திருடியாய் விடுவாளா? நிரபராதியான என் அம்மா அந்த நகையைத் திருடினாள் என்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, இரண்டு வருஷ கடுங்காவல் தண்டனை அடைந்தாள். அந்த அவமானம் பொறுக்க முடியாமல் தண்டனை கிடைத்த ஆறுமாதத்திற்குள்ளாகவே அவள் இறந்துவிட்டாள். சாகும்பொழுது அவள் சொன்ன வார்த்தைகள் என் மனதில் இன்னும் அப்படியே பதிந்து நிற்கிறது. "அஞ்சலை, அழாதே, கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். உன்னை இந்த நிலையில் தவிக்க விட்டுச் செல்கிறேன். இதற்கு உண்மைக் காரணமானவர்களின் குடும்பம் கூடிய சீக்கிரம் நசித்துப் போகட்டும்"

என்று சொன்னாள். அம்மா, எங்கம்மாள் இட்டசாபம் இத்தனை நாளுக்குள் பலித்திருக்கும் என்பது நிச்சயம்.........'' என்று விக்கி விக்கி அழுதுகொண்டே சொன்னாள் அந்தப் பிச்சைக்காரி.

என்னை யாரோ சம்மட்டியால் அடிப்பதுபோன்றிருந்தது. என் ஹிருதயத்தை ஒரேயடியாய் ஆயிரம் தேள்கள் கொட்டியதுபோன்றிருந்தது. அவளைச் சற்று நேரம் இருக்கச் சொல்லிவிட்டு, உள்ளே சென்றேன். என் கணவர் ஏதோ பிதற்றிக்கொண்டிருந்தார். தெர்மாமீட்டரை எடுத்து வாயில் வைத்து அவர் ஜ்வரத்தின் வேகத்தை அளந்துபார்த்தேன். "ஆண்டவனே, இது நல்ல படியாய் முடிய வேண்டுமே'' என்று எண்ணிக்கொண்டு ஒரு பழம் புடவையை எடுத்துக்கொண்டு போய் அஞ்சலையிடம் கொடுத்து, அஞ்சலை, எங்கள் வீட்டிற்கு ஒரு ஆள் தேவையாயிருக்கிறது, நாளைக்கு வா'' என்று சொல்லி அவளை அனுப்பினேன்.

என்னால் என் மன வேதனையை அடக்க முடியவில்லை. எட்டு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று என் மனத்திரையின் முன் காட்சியளித்தது.

3

மருடஞ்சாவடியிலே பெரிய மிராசுதாராய் இருந்த மாத்ரு பூதேஸ்வர ஐயரைத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். 'என்னதான் பணம் இருந்தாலும் என்ன, செலவழிக்க மனம் வராத கருமி' என்பார்கள் அவரை அவ்வூர்க்காரர்கள். ஆமாம். அவர்கள் சொல்வது போல மிகுந்த கண்டிப்புள்ளவர்தான் அவர். தன் உயிரே போய் விடுவதாய் இருந்தால்கூட ஒருகாசு அனாவசியமாகச் செலவழிக்க மாட்டார். அவருடைய இரண்டாவது பெண் நான். நானும் என் அக்காவும்தான் அவரின் குழந்தைகள். என் அக்காளைத் தகுந்த இடத்திலே கலியாணம் செய்து கொடுத்திருந்தார் என் தகப்பனார். நான் உள்ளூரிலேயே ஸ்கூல் பைனல் வாசித்துக் கொண்டிருந்தேன்.

காத்தாயிதான் எங்கள் வீட்டிற்கு வேலை செய்துகொண்டிருந்தாள். கொஞ்சம் வாயாடி. ஆனால் கண்ணியமானவள்.

எனது அக்காவின் கணவன் மதுரையில் ஒரு பாங்கியிலே காஷியர் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவர் மிகுந்த செலவாளி. குதிரைப் பந்தயத்திலே மிகவும் ஆசைகொண்டவர். கையிலிருக்கும் காசையெல்லாம் குதிரைப் பந்தயத்தில் ஒழித்து விட்டுப் பிறகு பணம் இல்லாமல் விழிப்பார். இப்படியே அவர் சுமார் இருபதினாயிரம் பெறுமான தன் ஆஸ்தியை அழித்து விட்டார். எனது அக்காவும், அப்பாவும் அவருடைய ஸ்பைத்தியத்தை நிறுத்த எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. ஆதலால் என் தகப்பனார் அவர் மீது வெறுப்படைந்து அவருடன் சரியாகப் பேசுவதுகூட இல்லை.

ஒரு நாள் மாலை. என் தகப்பனார் தஞ்சாவூருக்குச் சென்றிருந்தார். அம்மா கோயிலுக்குச் சென்றிருந்தாள். நான் மாத்திரம் தனியாக மேல் மாடியில் உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது எதிர்பாராத விதமாக என் அத்திம்பேர் என் அறையில் நுழைந்தார். நான் திடுக்கிட்டுவிட்டேன். எதிர்பாராத விதமாக வழக்கமில்லாது வந்தது எனக்கு வியப்பையும் சந்தேகத்தையும் அளித்தது.

"வாங்கோ, அத்திம்பேரே, இப்பத்தான் வறேளா, அதிசயமா இருக்கே'' என்றேன்.

"அதிசயம்தான் கமலா, உன்னிடம் தனியாக ஒரு விஷயம் பேச வேண்டுமென்று வந்திருக்கிறேன். கீழே அப்பா இருக்கிறாரா?''

"ஒருவரும் இல்லை, அப்பா தஞ்சாவூருக்குப் போயிருக்கிறார். அம்மா கோவிலுக்குப் போயிருக்கிறார். என்ன விசேஷம்?'' என்று கேட்டேன் நான்.

"விஷயம் ரகசியமாக இருக்க வேண்டும். கமலா, சென்ற வாரம் ஊட்டி ரேஸில் நிச்சயம் ஜயித்துவிடலாம் என்ற நம்பிக்கையின் மேல் 500 ரூபாயைப் பாங்கிப் பணத்திலிருந்து எடுத்து விட்டேன். ரேஸ் தோற்றுவிட்டது. என் நிலைமையும் மோசமாகி விட்டது. என் மேல் அரஸ்ட் வாரண்ட் வருவதொன்றுதான் பாக்கி. பணத்தைக் கட்டி விட்டால், நான் தப்பித்துக்கொள்ள முடியும். பணம் எங்கேயும் கிடைக்கவில்லை. அதற்காகத்தான் உன்னிடம் வந்திருக்கின்றேன். நீதான் இந்த இக்கட்டான நிலையில் எனக்கு உதவி செய்ய வேண்டும்'' என்றார்.

பாங்கியில் பணத்தைக் கையாடி விட்டு எக்கச்சக்கமான நிலையில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறார் என்பது ஸ்பஷ்டமாக எனக்கு விளங்கியது.

"அத்திம்பேரே, இன்னும் அந்தப் பைத்தியம் உங்களை விட்டுப் போகவில்லையா, பாங்கிப்பணத்திலிருந்து கையாடும் நிலைமைக்குக் கூட வந்து விட்டீர்களே?'' என்றேன்.

"கமலா, இப்பொழுது அதையெல்லாம் பேச எனக்கு நேரமில்லை. வீட்டில் பணம் ஏதாவது இருந்தால் எடுத்துக் கொடு! நான் சீக்கிரம் ஊருக்குத் திரும்பாவிடில் என்மேல் வீண் சந்தேகங்கள் ஏற்பட நேரிடும்"

நான் விறு விறு என்று கீழே இறங்கிவந்து பெட்டியில் இருந்த ஐநூற்றுச் சொச்சம் ரூபாயிலிருந்து ஐநூறு ரூபாயை எடுத்துக்கொண்டு மேலே சென்றேன்.

"பணம் ஏதாவது இருந்ததா, கமலா!" என்று கேட்டார் அவர்.

"இருக்கிறது, கொடுக்கிறேன். ஆனால்..............." என்று மெதுவாக இழுத்தேன்.

"என்ன? ஆனால் கீனால் என்று இழுக்கிறாயே," என்று கேட்டார் அவர்.

"நீங்கள் இனிமேல் குதிரைப் பந்தயத்திற்குப் போகமாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? என்னிடம் சத்தியம் செய்து கொடுங்கள்" என்றேன்.

"கமலா,.........எனக்குப் புத்தி வந்துவிட்டது. சத்தியமாகச் சொல்கிறேன். இனிமேல் குதிரைப் பந்தயத்திற்கே போக மாட்டேன்" என்றார் கண்கலங்க.

பிறகு என்னிடமிருந்து பணத்தை வாங்கிக்கொண்டு, தன் வரவை மிகவும் ரகசியமாகவே வைத்திருக்கும்படி சொல்லிப் புறப்பட்டுச்சென்றார். நானும் அவர் வந்ததை வீட்டில் ஒருவருக்கும் தெரியப்படுத்தவில்லை.

மறு நாள் பகல் மூன்று மணி இருக்கும். என் தகப்பனார் தஞ்சாவூரிலிருந்து அப்பொழுதுதான் வந்தார். வந்தவர் என்னைக்கூப்பிட்டு, "கமலா, உன்னுடைய வைரப் பதக்கத்தில் திருகு ஒன்று காணோம் என்று சொன்னாயே, தட்டான் வந்திருக்கிறான், பதக்கத்தைக் கொண்டுவா," என்றார்.

நான் மாடிக்குச் சென்று என் மேஜை டிராயரைத் திறந்தேன். என் மனம் பக்கென்றது. வைரப் பதக்கத்தைக் காணோம்......! என்ன ஆச்சரியம்! நேற்று மத்தியானம் டிராயரிலிருந்த பதக்கம், இப்பொழுது காணவில்லை. மாடி முழுவதையும் தேடினேன். எங்கும் காணவில்லை. 'நேற்று மத்தியானத்திற்குப் பிறகு ஒருவரும் வரவில்லையே. சாயந்திரம் அத்திம்பேர்தான் வந்தார். வந்தவர் சிறிது நேரத்திற்குள்தான் போய் விட்டாரே. அதன் பின் காத்தாயிதான் இன்று காலையில் மாடியைப் பெருக்க வந்தாள். ஒருவேளை அவள்......' என்ற யோசனைகள் என் மனதில் ஓடின.

"கீழே தட்டான் காத்துக் கொண்டிருக்கிறான் என்பதை மறந்து விட்டாயா? சீக்கிரம் வா" என்ற என் தகப்பனாரின் உரத்த குரல் கீழிருந்து கேட்டது.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. கீழே போய் அப்பாவிடம் மெதுவாக, "பதக்கத்தைக் காணோம்" என்றேன்.

"காணோமா," என்று கர்ஜித்தார் என் தகப்பனார். சிறிது நேரத்தில் வீடு அல்லோலகல்லோலப்பட்டது. 'மாடியில் இருந்த வைரப் பதக்கம் எங்கே போய் விடும்? அதை யார் எடுத்திருக்க முடியும்? எடுத்திருந்தால் காத்தாயிதான் எடுத்திருக்க வேண்டும்' என்ற சந்தேகம் எல்லோர் மனத்திலும் தோன்றியது. சிறிது நேரத்தில் போலீஸும் வந்து விட்டது. விஷயம் சாமான்யமானதா? வைரப் பதக்கம் அல்லவா?

அவர்களும் காத்தாயியின் மீதுதான் சந்தேகப்பட்டார்கள். அவள் கைகளில் விலங்குகள் மாட்டப்பட்டன. காத்தாயியின் கண்களில் நீர் வடிந்தது. தான் நிரபராதி என்று அவள் கதறினாள். போலீஸார் அவள் அலறலை லட்சியம் செய்யாது அவளை ஸ்டேஷனுக்கு இழுத்துக்கொண்டு சென்றார்கள். அவள் போகும் பொழுது என்னைப் பார்த்து, "அம்மா, பண்டமோரிடம் பழியோரிடம் என்று சொல்வது நிஜந்தான். அநியாயமா எம் மேலே திருட்டுப் பட்டங் கட்டி ஜயிலுக்கு அனுப்புறீங்க, உங்க குடும்பம் நிலைக்குமா?" என்று அழுதபடியே சொன்னாள்.

4

இந்த சம்பவத்திற்குப் பிறகு வருஷங்கள் மூன்று உருண்டன. எனக்கும் கலியாணமாய் நான் புக்ககம் சென்றுவிட்டேன். திடீரென்று ஒரு நாள் என் அக்கா மரணப் படுக்கையில் இருப்பதாக எனக்குத் தந்தி வந்தது. கணவரிடம் அனுமதி கேட்டுக்கொண்டு உடனே மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

என் அக்கா எலும்புந் தோலுமாய் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருந்தாள். என் அத்திம்பேரைப்பற்றிய வருத்தமே அவளை இவ்வாறு சீர்குலையச் செய்துவிட்டது. "அக்கா," என்று அவளைக் கட்டிக்கொண்டு அழுதேன். அவளும் என்னைப் பார்த்து கண்ணீர் வடித்தாள்.

"கமலா, நான் இனிமேல் பிழைக்கமாட்டேன். நான் இறப்பதைக் குறித்துக் கவலைகொள்ளவில்லை. உன் அத்திம்பேர் எனக்குப் பிறகாவது நல்ல புத்தியுடன் நடந்துகொண்டு எதிர்காலத்தைச் சந்தோஷமாகக் கழிப்பாரா என்றுதான் என் மனம் சங்கடப்படுகின்றது" என்று அவள் சொல்லி, தன் தலையணையின் கீழிருந்து ஒரு வஸ்துவை எடுத்து என்னிடம் காட்டினாள். என்ன அது? வைரப் பதக்கம்! மூன்று வருஷங்களுக்குமுன் காணாமற்போன வைரப்பதக்கம்! நான் திகைத்து நின்றேன்.

"உன்னுடைய வைரப் பதக்கந்தான் இது. உன்னிடம் ஐநூறு ரூபாய் பெற்றுக்கொள்ள வந்த சமயத்தில், உனக்குத் தெரியாமல் உன்னிடமிருந்து உன் அத்திம்பேர் திருடிக்கொண்டு வந்த வைரப் பதக்கந்தான் இது. என்ன கமலா, திகைக்கிறாய்? அவரைத் திருடனென உலகம் பழிக்கும் என்றஞ்சி இதை மறைத்துவிட்டேன். இந்தா, இதை வாங்கிக்கொள்" என்று என்னிடம் என் அக்காள் வைரப் பதக்கத்தைக் கொடுத்தாள்.

அவள் பிழைக்கவில்லை, இறந்தே விட்டாள். இறக்கும்போது அவள் கூறிய மொழிகள் இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

"கமலா, அவரைத் திருடன் என்றெண்ணாதே. விதி அப்படிச் சதி செய்துவிட்டது. நல்ல பெண்ணாகப் பார்த்து அவருக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையதுதான்" அவளுக்கு அவள் கணவன் மேல் அவ்வளவு அன்பு.

காத்தாயி—அவள் நிரபராதி. அநியாயமாய் என்னால் தண்டனை அடைந்ததோடு சிறையிலேயே இறந்து விட்டாள். நிரபராதியான அவள் மனங்கலங்கிச் சொன்ன சொல் நிச்சயம் பலிக்கும். இதற்கு என்ன பிராயச்சித்தம் செய்வதென்று எனக்குப் புரியவில்லை.



"அதோ போறாரே, அவருக்கு கொஞ்ச நாளா கஷ்டகாலம் போலேருக்கு."

"அதெப்படி உங்களுக்குத் தெரியும்."

"இல்லீங்க கோவில் சுத்தி வட்டத்தாரத்திலேயே வராத ஆசாமி, ஒரு வாரமா தவறாமே சாமி தரிசனம் பண்ணிட்டு வாராரு."

5

காலச்சக்கரம் உருண்டது. என் நாத்தனார் சீதாவையே என் அத்திம்பேருக்கு இரண்டாந் தாரமாகக் கலியாணம் செய்து வைத்தேன். அதன்பின் அடுக்கடுக்காக விபரீத சம்பவங்கள் பல நேர்ந்தன. என் தகப்பனார் பிளாக் மார்க்கட் செய்தார் என்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, லட்ச ரூபாய் அபராதம் செலுத்தினார். அபராதம் செலுத்திய மறுநாளே, அவரும், என் தாயாரும் பிளேக் கண்டு இறந்தனர். என் மகன் சீனுவின் திடீர்ச்சாவு என் மனத்தையே கிடுகிடுக்க வைத்துவிட்டது. காத்தாயியின் சாபம் பலித்துக்கொண்டிருக்கிறது என்பது நிச்சயமாகிவிட்டது. இதற்கு விமோசனமே இல்லையா?

ஏன், அஞ்சலை.........காத்தாயியின் மகள் நம்மிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறாளே, அவளைக் கை தூக்கிக் காப்பாற்றினால்......?

இந்த யோசனைகளில் ஆழ்ந்த எனக்கு நேரம் போனதே தெரியவில்லை. மறுநாள் அஞ்சலை வந்தாள். என் வீட்டுக் காரியங்களையெல்லாம் செய்ய ஆரம்பித்தாள். நானும் அவளை அன்புடன் உபசரித்தேன்.

என் மனம் ஆறுதலடைந்தது.

6

அன்று தீபாவளி. என் அத்திம்பேர்........அல்ல, சீதாவின் அகமுடையான் புது ஆடை உடுத்துக்கொண்டு பட்சணம் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். நோயினின்றும் குணமடைந்திருந்த என் கணவர் அவர் எதிரில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். புதுப் புடவையுடன் புன்னகை ததும்ப நின்றுகொண்டிருந்தாள் அஞ்சலை.

"அஞ்சலை, வா இப்படி," என்றேன்.

அவள் வந்து என் எதிரில் நின்றாள்.

"இந்தா, இதை உனக்கு தீபாவளி இனாமாகக் கொடுக்கிறேன், இதை அணிந்துகொள்" என்று அவளிடம் ஒரு சாமானைக் கொடுத்தேன்.

அதைப் பார்த்த என் அத்திம்பேர் முகத்தில் அசடு வழிந்தது. அவர் திருடிய வைரப் பதக்கத்தையல்லவா, நான் அஞ்சலையிடம் கொடுத்தேன்!

அஞ்சலைக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படிப் புரியும்?

காத்தாயியின் சாபம் விமோசனம் அடைய வழிபிறந்துவிட்டது என்று என் மனம் ஆறுதலடைந்தது அவளுக்குத் தெரியுமா?



தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

'பாரும் எதிரிகளின் படை வகுப்பை' என்று துரியோதனன் பேச்சைத் தொடங்கிய போது, துரோணர் அத்திசையை நோக்கினர். துரியோதனன் மேலும் சொல்லுகிறான். 'பாண்டவ சேனையில் ஒவ்வொருவரும் பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் சமமாயிருக்கின்றனர் பெரிய விற்களையும் பிற ஆயுதங்களையும் தாங்கியிருக்கும் யுயுதானன், விராடன், துருபதன், திருஷ்டகேது, சேகிதானன், புருஷஜித்து, குந்திபோஜன், சைப்யன், யுதாமந்யு, உத்தமௌஜா, சுபத்திரை மைந்தன், துரோபதை மக்கள் முதலிய தலைவர்களைப் பாரும் ஒவ்வொருவனும் பதினாயிரம் வில்லாளிகளை எதிர்க்கக்கூடிய மகாரதியாகவே இருக்கிறான்.

நமது சார்பிலோ, நீரும் பீஷ்மரும் கர்ணனும் கிருபாசாரியரும் இருக்கிறீர்கள். உங்களைப் போலவே என்பொருட்டு உயிரை விடத் துணிந்து ஆயுதம் தாங்கியவர்களாய் சயசாலியான அசுவத்தாமாவும், விகர்ணனும், பூரிசிரவசும், ஜயத்திரதனும், வேறு பல வீரர்களும் பலசாலிகளாய் இருக்கிறார்கள். எனினும், பீஷ்மரால் காக்கப்படுகிற நமது சேனை வலியற்றது. பீமனால் காக்கப்படுகிற பாண்டவ சேனையோ, அளவில் குறைந்தபோதிலும்,வலிமையுடையது. நீங்கள் எல்லோரும் அவரவர்க்குரிய இடங்களிலிருந்து கொண்டு பீஷ்மரையே எல்லாப் பக்கங்களிலும் காக்க வேண்டும் என்று துரியோதனன் கூற, அவனுக்கு உற்சாகமுண்டாக, பீஷ்மர் சிங்கநாதம் செய்து சங்கத்தை ஊதினார். பேரி முதலிய போர் வாத்தியங்கள் முழங்கின. வெண் குதிரை பூட்டிய தேரில் ஏறிய கிருஷ்ணனும் அர்ஜுனனும் சங்கத்தை ஊதினர். யுதிஷ்டிரர் முதலியோரும் தனித் தனியாய்ச் சங்கங்களை ஊதினர். இவ்வொலி எங்கும் பரவி, கௌரவர் நெஞ்சைப் பிளந்தது.

3

பசு உருவத்தில் வந்த புலி

★

இரு சேனைகளும் வில்லேந்தி அம்பு விடும் வேளையில் அர்ஜுனன் கௌரவர்களை நோக்கி வில் வளைத்தான். அம்பு தொடுக்கு முன் தன் தேரை இரண்டு சேனைகளுக்கும் நடுவே கொண்டு போய் நிறுத்தச் சொல்லக், கிருஷ்ணனும்

என்று விசயன் இசைப்ப
எழில் கண்ணன்
சென்றங் கிருபடையுள்
தேர் நிறுத்தி—நின்றணியும்
பாட்டன் துரோணன்முன்
பார்த்தனே பல் குருக்கள்
ஈட்டம்பார் என்றான் எடுத்து.

(இ-ள்) என்று விசயன் இசைப்ப—(நடுவே நிறுத்து) என்று அர்ஜுனன் சொல்ல, எழில் கண்ணன்—அழகுடைய கிருஷ்ணன், இருபடையுள் சென்று-இரண்டு சேனைகளுக்கும் நடுவே போய், அங்கு நின்று அணியும் பாட்டன் துரோணன் முன் தேர் நிறுத்தி—அவிடத்தில் நின்றபடியே (போருக்கு ஆயத்தமாக ஆயுதங்களைப்) பூண்டு கொண்டிருந்த பீஷ்மர், துரோணர் முதலானோர் முன்னே தேரை நிறுத்தி, பார்த்தனே—அர்ஜுனா! பல்குருக்கள் ஈட்டம்பார்—கௌரவர்பலர் சேர்ந்த கூட்டத்தைக் காண்பாயாக (என்று), எடுத்து என்றான்—எடுத்துச் சொன்னான்.

ஏவமுக்தோ ஹ்ருஷீகேசோ
3 3 4
குடாகேசேந பாரத
4 4
ஸேநயோ ருபயோர் மத்யே
2 2
ஸ்தாபயித்வா ரதோத்தமம்
4 3 2
பீஷ்ம த்ரோண ப்ரமுகதஸ்
ஸர்வேஷாம்ச மஹீக்ஷிதாம்
2
உவாச பார்த பச்யைதாந்
ஸமவேதாந் குரூநிதி

(இ-ள்) ஸஞ்சயன் சொல்வது:—பாரத-திருதராஷ்டிரனே! ஹ்ருஷீகேச:—ஸ்ரீ கிருஷ்ணனை

வர், குடாகேசேந—அர்ஜுனனால், ஏவம் உக்த:—இவ்வாறு சொல்லப்பட்டு, உபயோ: ஸேநயோ: மத்யே—இரண்டு சேனைகளுக்கும் நடுவில், பீஷ்மத்ரோண ப்ரமுகத:—பீஷ்ம துரோணருக்கு முன்பும், ஸர்வேஷாம் மஹீக்ஷி தாம்ச—எல்லா அரசர்களுக்கு முன்பும், ரதோத்தமம்—சிறந்த ரதத்தை, ஸ்தாபயித்வா—நிறுத்தி பார்த்த—குந்தி புத்திரனே! ஸம்வேதாந்—சேர்ந்திருக்கிற, ஏதாந் குரூந்—இந்தக்கவுரவர்களை, பச்ய—பார், இதி உவாச—என்று சொன்னார்.

அர்ஜுனன் பெண்களைப்போலவே சோக மோகங்களுக்கு வசப்படக்கூடியவன் என்பதைக் கிருஷ்ணன் நன்கு அறிந்திருந்தார். வேறு வேறு பெயரிட்டழைக்காமல் அதற்கேற்ப 'பார்த்தனே' என்று விளித்தார். பிருதை என்னும் பெயருடைய குந்தி தேவியின் புத்திரன் என்பது பொருள். அர்ஜுனனை வியாஜமாக்கி கிருஷ்ண பகவான் உலக நன்மையின் பொருட்டு தத்துவத்தை வெளியிட வேண்டுமென்று கருதினார். அதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தைத் தோற்றுவிக்க விரும்பினார். அர்ஜுனன் உள்ளத்தில் தகாத கருணையையும், அதன் காரணமாக சோக மோகத்தையும் உண்டாக்கும் பொருட்டு, எதிர் அணியில் அன்பிற்கும் மரியாதைக்குமுரிய பிரதான புருஷர்கள் நன்கு தெரிய வேண்டும் என்று 'பல் குருக்கள் சட்டப்பார்' என்று எடுத்துக் கூறினார்.

அப்பொழுது அர்ஜுனன், தந்தையரையும், பாட்டன்மார்களையும், குருக்களையும், மாமன்மாரையும், சகோதரர்களையும், புதல்வர், பேரர், தோழர் முதலியோரையும் தனக்கு எதிரியாகப் போர் செய்யத் திரண்டிருப்பதைப் பார்த்தான் பலமுறை எண்ணிப் பின் செய்வதற்குத் துணிந்த போராகிய கருமத்திற்குத் தடையாக அர்ஜுனன் உள்ளத்தில் ஒரு உணர்ச்சி தோன்றவாரம்பித்தது. அது வர வர அளவில் பெருகி, புறத்தோற்றத்தால் பெருங்கருணையென்றே அர்ஜுனன் நினைக்கும்படியாயிற்று. அவ்வுணர்ச்சி தோன்றியதும், வளர்ந்ததும், வளர இடங்கொடுத்தவனைப் பற்றியதும், அப்பொழுது அவன் அடைந்த நிலையையும் கவிக்கண்ணாடியிலேதான் காணவேண்டும்.

மேவலராய் நின்றுஎதிர்ந்த
மிக்கபெருஞ் சுற்றமாம்
காவலரை நோக்கிக்
கவுந்தேயன்—நோவதனான்
மிக்கமனம் பேரிக்க
மேவிப் பிரான்முன்தான்
தக்கஉரை செய்தான் தளர்ந்து.

(இ-ள்) மேவலராய் நின்று—(ஐந்து வீடுகளும் கொடுக்க) உடன்படாதிருந்து, எதிர்ந்த—(சண்டையில்) எதிர்த்து வந்த, மிக்கபெரும் சுற்றமாம் காவலரை—எண்ணில் மிகுந்த நெருங்கிய உறவினராகிய தலைவர்களை நோக்கி—பார்த்து, கவுந்தேயன்—குந்தி புத்திரன், பேர் இரக்கம் மேவி—பெருங்கருணை அடைந்து, அதனால் நோவுமிக்க மனம்—அதன் காரணமாக வேதனை அதிகரித்த மனம், தளர்ந்து—குன்றி, பிரான் முன்—கிருஷ்ணன் முன்னிலையில், தான் தக்க உரைசெய்தான்—அவன் (சோக மிகுதிக்குத்) தகுதியான வார்த்தை சொன்னான்.

தாந் ஸமீக்ஷ்யஸ கௌந்தேயஸ்
3 4 2
ஸர்வாந் பந்தூ நவஸ்திதாந்
க்ருபயா பரயா விஷ்டோ
3 3 3
விஷீதந் நிதமப்ரவீத்.

(இ-ள்) ஸ: கௌந்தேய:—அந்தக் குந்தி புத்திரன், அவஸ்திதாந்—போர்க்களத்தில் இருந்த, தாந் ஸர்வாந் பந்தூந்—அந்த எல்லா பந்துக்களையும், ஸமீக்ஷ்ய—பார்த்து, பரயாக்ருபயா—பெருங்கருணையால், ஆவிஷ்ட:—பற்றப்பட்டவனாய், விஷீதந்—துக்கித்துக்கொண்டு, இதம்—இந்த வார்த்தையை, அப்ரவீத்—சொன்னான்.

அர்ஜுனன் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்றமாட்டாமல் மனம் தளர்ந்து பின்வாங்கலானான். அதனால் பெண்கள் போல் அர்ஜுனன் பேதமையுடையவனாயிருத்தல்பற்றி 'குந்தியின் மைந்தன்' என்னும் பொருள்பட 'கவுந்தேயன்' என்றார்.

துரியோதனாதியர் தன் மனைவியை அரச சபையில் இழுத்து வந்து துகில் உரிந்து அவமதித்தனர். பதின்மூன்று வருஷ வனவாசத்திற்குப் பின் பாதி ராஜ்யம் கொடுப்பதாகச் சம்மதித்திருந்தும், ஐந்து வீடுகளும் கொடுக்க மறுத்தனர். அதனால் தன் இனத்தவரிடம் இரக்கமும் பகைவரிடம் கோபமும் கொண்டு போர் செய்வது நியாயம் என முடிவு செய்து, போர்க்களம் வந்த பின் அர்ஜுனனுக்குப் பகைவரிடம் இரக்கம் உண்டாயிற்று. அவ்விரக்கம், முன்னமே தன் மீதும் தன் மனைவி, சகோதரர் மீதும் கொண்ட இரக்கத்திற்குப் பாதகமாகி அதை வென்று அழித்து விட்டதால் 'பேர் இரக்கம்' எனப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில் தீய குணம் நற்குண வேஷம் பூண்டு வந்து ஏமாற்றுவதுண்டு. நீதிபதிக்கு, குற்றம் நன்கு ருஜுவான குற்றவாளிக்குத் தண்டனை விதிக்க வேண்டிய காலத்தில் தோன்றும் கருணையும், சட்டத்தை மீறு கிறவனைக் கைது செய்யும்போது போலீஸ் அதிகாரிக்கு அதற்குத் தடையாக மனதில் ஏற்படும் கருணையும் இந்த ரகத்தைச் சார்ந்ததே. யுத்தம்செய்வதைக் கடமையாகக் கொண்ட க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த அர்ஜுனன், தீவிரமான ஆலோசனைக்குப் பின் போரை மேற்கொண்டான். போர் செய்யும் தருணத்தில் சோகம் என்னும் புலி, கருணை என்ற பசுந்தோலைப் போற்றிக் கொண்டு அர்ஜுனனை ஏமாற்ற வந்தது.

(தொடரும்)

இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

கொள்ளக் குறைவற்(று) இலங்கிக்,
கொழுந்துவிட்(டு) ஓங்கிய உன்
வள்ளல் தனத்தினால் வல்வினை—
யேன்மனம் நீ புகுந்தாய்,
வெள்ளைச் சுடர்விடும் உன்பெரு
மேன்மைக்(கு) இழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும், இராமா—
நுசவென் தனிநெஞ்சமே. [27]

நெஞ்சில் கறைகொண்ட கஞ்சனைக்
காய்ந்த நிமலன், நங்கள்
பஞ்சித் திருவடிப் பின்னைதன்
காதலன், பாதம் நண்ணா
வஞ்சர்க்(கு) அரிய இராமா
நுசன் புக(ழ்) அன்றி என்வாய்
கொஞ்சிப் பரவகில்லா(து);
என்ன வாழ்(வு) இன்று கூடியதே. [28]

[இலங்கி-விளங்கி, வெள்ளைச்சுடர் விடும்-பரிசுத்தமாகப் பிரகாசிக்கும். இழுக்கு இது என்று-குற்றமாகும் இச்செயல் என்று, தள்ளுற்று-தளர்ந்து. இரங்கும்-(இங்கே) ஈடுபடும். என் தனி நெஞ்சம்-பாவத்தில் நிகரற்றிருக்கும் என்னுடைய நெஞ்சு.]

ராமாநுஜருடைய ஞானவண்மையானது வேண்டுவார்க்கு வேண்டுவதெல்லாம் கொள்ளலாம்படி ஒரு குறைவும் இல்லாதது; கொடுக்கக் கொடுக்க மேன்மேலும் விளங்கிக் கொழுந்துவிட்டு ஓங்கி வளர்வது. இத்தகைய வண்மைப் பண்பினால் தீவினையேனாகிய என் உள்ளத்திலும் உம்முடைய பெருமை பாராமல் வந்து புகுந்தீர், இதனால் தூய வெள்ளையென்று சொல்லும்படியாகச் சுடர்விடும் உம் பெருமேன்மைக்கு இழுக்கு வந்துவிடுமே என்றுதான் என் நெஞ்சம் தளர்ந்து இரங்குகிறது.

[கறை-களங்கம். கஞ்சன்-கம்ஸன். காய்ந்த-கோபித்த. நிமலன்-குற்றமற்ற கண்ணன். நங்கள்-எங்கள். பஞ்சித் திருவடிப் பின்னை-பஞ்சு போல மிருதுவான அழகிய அடிகளையுடைய நப்பின்னை; கண்ணனின் மனைவி. நண்ணா-அடையாத. கொஞ்சிப் பரவகில்லாது-கொஞ்சி ஏத்தமாட்டாது.]

தீய நெஞ்சினனான கம்ஸனின் சத்துருவும் நப்பின்னைப் பிராட்டியின் காதலனுமான கண்ணனை நண்ணாதவர்கள் தங்கள் ஆத்மாவுக்கே வஞ்சகர், ராமானுஜரின் அருளுக்குப் புறம்பானவர். இப்படிப் பக்தரல்லாதாரை விலகி நிற்கும் ராமானுஜருடைய புகழைத் தான் என் வாய் கொஞ்சிப் பரவுகிறது. வேறு ஒன்றையும் இப்படிக் கொஞ்சிப் பரவ இயலவில்லை என்ன வாழ்வு பெற்றேன்!

ராகம் : காமவர்த்தனி **தாளம் : சாபு**

; த பா, ப | பா, பா, பா தநி தப பா | , பத ஸ்நி தா தநி | ஸ்ா, ஸ்ா நி தநி ஸ்ா ரிஸ் நி தபம ||
கொள்ளக் கு | றைவ ற்றிலங். கி . . | . கொழுந்து . . விட். | டோங்கி . ய . . . . . உன் . . ||

; க ஸ்நி தா பம | கா, தபம கரி ரிஸ் | ஸா, ரிகா கரி கா | பா கமா, பம நித தப பா ||
வள் ளல் . . தன | த்தினுல் . . வல் . வினை | யேன் . . ம . னம் | நீ . பு குந் . . . தாய் . . ||

; தநி தநி மா த | நீ, ஸ்ா, ஸ்நி க்ரி ரிஸ் ஸ்ா | , ஸ்ஸ் ஸ்நி க்ரி ரிஸ் ஸ்ா | நிரீ ஸ்நித நீ ஸ்ா |
வெள் . ளை . . சசு | டர் வி டும் . . . உன் . . | பெ ரு மேன் . . மை . க்கி | மு . க்கி . . நென்று ||

: ஸ் ஸ்நி க்ரி ரிஸ் ஸ் | ஸ்நி ரி ஸ்நித பத நிஸ் ரிஸ் | ஸ்ா ரிநி நிரி ஸ்நி தநி தப பா | பமநி தப பா பாபம கபமரி ||
தள் ளு . . . ற்றி . ரங் | கும் . . இ . . ரா . மா . . . . | . . . னு . ச . . . என் . . | த . . னி . . நெஞ்ச . மே . . . ||

கா — பபா பப | பா, பா, பா தநி தப பா | ; பத தஸ்ாநி தா தரி | ஸ்ா, ஸ்ாநி தநி ஸ்ாரி ஸ்நி தபம ||
. — நெஞ்சில் கறை | கொண்ட கஞ்ச . னை . . | . காய்ந் . த . . . நி . | ம லன் . நங் . . . . . கள் . . ||

; க ஸ்நி தா பம | கதப பமக ரிக மா பம கரி ஸஸ | ; ஸரி கா கரி | கமா பாம பா தநி தப பா ||
ப ஞ் சி . . த்திரு | வ . . டி . . பின் . னை . . . த்தன் . . | . கா . த லன் | பா . தம் . நண் . . ணு . . ||

; தநி த ஸ்ாநி ம தநி | ஸ்ா, ஸ்ா, ரி ரிஸ் ஸ்ா | , ஸ்ா ஸ்நி க்ரி ரிஸ் ஸ்ா | ஸ் நிரி ஸ்நி த நீ ஸ்ா ||
வஞ் , ச , . . க . | ரி ய இ ரா , . | . மா னு . சன். பு . கு | முன் . . றி , . என் வாய் ||

, ஸ்ஸ் ஸ்நி க்ரி ரிஸ் ஸ்ா | ஸ்நி ரிஸ் நித த மாத தநி | , ஸ்ா, ரி ஸ்நி தநி த பபா | பம நி தபப பம கா பம கப ||
கொஞ்சி ப்ப . ர . வ . கில் | லா . . து . . என் . . ன . | . வாழ் . வின் . . . று . . | கூ . . டி . , ய . . தே . . . ||

ம ரி —
. . —

(கொள்ளக் குறை)

மாதர் மகா சபை

'குங்குமம்'

'என்னடி அது, கையில் புஸ்தகம், 'கிஸ்தகம்' தடபுடலாய் இருக்கிறது?' என்று கையில் ஒரு புஸ்தகத்துடன் வந்த சரோஜாவைப் பார்த்துக் கேட்டாள் ருக்குவின் மாமியார்.

'ஆமாம்! இன்று உங்களுக்கு ஒரு கதை வாசிக்கப் போகிறேன்' என்றாள் சரோஜா.

'கதை வாசிக்கப் போகிறாயா? அதென்னடி அது. திடீரென்று ஒரு நாளுமில்லாத வழக்கம்? என்ன அது அப்படிப்பட்ட ஆச்சரியமான கதை?'

'ஏதாவது காதல் கதையாக இருக்கும்?' என்றாள் வசந்தா.

'பரவாயில்லையே! வசந்தாவுக்குக்கூட யக்ஷிணி பேசுகிறது மாமி' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் சரோஜா.

'ஆமாம். எங்கே அவளைக் காணோம்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'யாரை? மஞ்சுளாவையா? அவள் ஊர் போய்ச் சேர்ந்தாள்.'

'என்னமோ 'கரும் புரும்' என்று சண்டை போட்டுக் கொள்கிறதுகளே தவிர, ஒரு நிமிஷம் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்திருக்க முடிகிறதா பார்த்தீர்களா?' என்றாள் பானு.

'இதுதானடி யம்மா உலகம். என்னமோ ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொள்கிற மாதிரி இருக்குமே தவிர, அதெல்லாம் ஆசையை யொட்டின சண்டையாகத்தான் இருக்கும்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'இதென்ன வேடிக்கை இது? இன்று எல்லாருக்குமே யக்ஷிணி பேசுகிறது!' என்று சொல்லிவிட்டு இடிஇடியென்று சிரித்தாள் சரோஜா.

'ஏன், என்ன ஸமாச்சாரம்? நீ படிக்கப்போகிற கதைக்கும் மஞ்சுளாவின் கதைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்ன?'

'சம்பந்தமாவது! மஞ்சுளாவின் கதையேதான்.'

......''சிடு சிடு வென்று''......

'என்னடி, பிரமாத கிண்டல் செய்துகொண்டிருக்கிறாய்! சொல்லேன் விஷயத்தை 'சட்புட்' என்று' என்று கொஞ்சம் கடிந்துகொள்ளும் தோரணையில் பேசினாள் விமலா.

'அன்று மஞ்சுளா இங்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு போயிற்று லியோ?!...' என்று சரோஜா மிகுதியையும் சொல்லி முடிப்பதற்குள், 'நீ வந்தவுடனே நானும் அதைப்பற்றித்தான் கேட்கவேண்டுமென்றிருந்தேன். ஒரு நாளுமில்லாமல் புஸ்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டு வரவே அது மறந்துவிட்டது. ஆமாம். தனியாக ஏதோ பேசவேண்டுமென்று அழைத்துக் கொண்டு போயிற்று. 'என்ன சொல்லிற்று?'

'அதுதானே நான் படிக்கப்போகிற கதையும். கூப்பிட்டதா? இங்கிருந்து போனேன். 'சரோ, தர்ம சங்கடமான சமாச்சாரம். நீதான் யுக்தி சொல்ல வேண்டும்' என்று திடிதிப்பென்று ஒரு வெடியைத் தூக்கிப் போட்டது. 'ஏன், என்ன அப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டது?' என்றேன். 'இவர்களுக்கு (தாயார், தகப்பனாருக்கு) ஒன்றுமே தெரிய மாட்டேனென்

கிறதடி. என்னை இன்னும் ஒரு மாதம் இங்கே இருந்துவிட்டுத்தான் போகவேண்டுமென்கிருர்கள். 'அவரா' (மஞ்சுளாவின் அகமுடையான்) உடனே அடுத்த வண்டிக்கே புறப்பட்டு வந்துவிடும்படி கடிதம் எழுதிவிட்டார். என்ன செய்கிறதென்று தெரியவில்லை' என்ருள். 'ஏன், அவர் ஊருக்குப் போகும்போது ஒரு மாதம் இங்கே இருக்க அனுமதி கொடுத்துவிட்டுத்தானே போனுர்?' என்றேன். 'போகும்போது அப்படித்தான் சொல்லிவிட்டுப் போனுர். அங்கே போனதும் என்ன தோன்றிற்ருே என்னமோ தெரியவில்லை. உடனே புறப்பட்டு வந்துவிடும்படி எழுதிவிட்டார்' என்ருள்.

'ஏன், அதற்குமாத்திரம்தான் எழுதினுரோ? அதன் அப்பாவுக்கு எழுதவில்லையோ?' என்ருள் ருக்குவின் மாமியார்.

'அதானே வேடிக்கை! அவருக்கு எழுதியிருந்தால் 'தண்டாவே' இல்லையே. அவருக்கு எழுதாமல் அதற்கு மாத்திரம் எழுதியிருக்கிறது' என்ருள் சரோஜா.

'இருந்தால் என்ன? அந்தக் கடிதத்தை அவர்களுக்குக் காட்டினுல் போகிறது' என்ருள் வசந்தா.

'பரவாயில்லையே, மட்டைக்கு இரண்டு கீற்று என்று உடனே புரிந்துவிட்டதே. அவ்வளவு சீக்கிரம் இது மஞ்சுளாவுக்கோ, எனக்கோ புரியவில்லையம்மா' என்ருள் சரோஜா.

எல்லோரும் 'கொல்' என்று சிரித்துவிட்டார்கள்.

'இதுக்கு ஒரு சிரிப்பாக்கும்! ஏன்? கடிதத்தைக் காட்டக்கூடாதா என்ன? உலகத்திலே அகமுடையான் பெண்டாட்டிகள் கடிதம் எழுதிக்கொள்வதில்லையாக்கும்' என்ருள் வசந்தா.

'காட்டக்கூடிய கடிதமாக இருந்தால் உன்னையும் என்னையும் எதற்கடி யோசனை கேட்கிருள்? அது ஏதோ காட்ட முடியாத கடிதமாக இருக்கவேதானே யோசனை கேட்க என்னைக் கூப்பிட்டுக்கொண்டு போனுள்!' என்ருள் சரோஜா.

'என்னவாம் அதில்; அப்படிப்பட்ட தேவரகசியம்?' என்ருள் வசந்தா.

'அதைத்தான் இப்பொழுது நான் உங்களுக்கு வாசிக்கப் போகிறேன்' என்று சொல்லிக்கொண்டே சரோஜா அவள் கொண்டுவந்திருந்த புஸ்தகத்தினுள்ளிருந்து ஒரு கடிதத்தை எடுத்தாள்.

'இதென்னடி இது? நீ ஏதோ கதை வாசிக்கப்போவதாய்ச் சொன்னுயே, நிஜமாகத்தானுக்கும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். என்னடியம்மா, காதல் கதை என்று சொல்லுகிருளே என்று பார்த்தால், இப்பொழுதுதான் புரிகிறது' என்ருள் ருக்குவின் மாமியார்.

'அந்த பிள்ளை (மஞ்சுளாவின் அகமுடையான்)தான் மகா ஸங்கோஜி என்று ஏற்கெனவே தெரியுமே உங்களுக்கு. என்னமோ ஊருக்குப் போகும்போது ஒருமாதம் இருந்துவிட்டு வரட்டும் என்று சொல்லிவிட்டு வந்தேன். இப்பொழுது நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. ஆகையால், மஞ்சுளாவைக் கடிதம் கண்டவுடன் கொண்டுவிட்டுவிடவும். இன்னொரு சமயம் அனுப்புகிறேன். ஒரு மாதத்துக்கு இரண்டு மாதமாக இருந்துவிட்டு வரட்டும் என்று மாமனுருக்குத் தைரியமாக ஒரு கடிதம் எழுதலாமோலியோ?' என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில், அப்படி எழுதிவிட்டால், வீண் தகராறெல்லாம் ஏன் ஏற்படப் போகிறது? அந்த ஒரு தைரியம் இல்லாததுதானே வீண் சண்டைக்கும் மனஸ்தாபத்துக்கும் காரணமாக இருக்கிறது. அதென்னமோ, சில பசங்கள் பார்த்திருககிறேன். மகா ஸங்கோஜிகள். அந்த சங்கோஜத்தினுல் அனுவசியமான தொல்லைகளும் மனஸ்தாபங்களும் ஏற்படுகின்றன என்ருள் ருக்குவின் மாமியார்.



"......அந்த அசட்டு, அம்மாக்காரி தானே......"

சில பசங்கள் என்ன? நம்ம மாமாவின் பிள்ளையில்லையோ? -என்றாள் ருக்கு.

"ஆமாம்; ஆமாம். தோளில் ஆட்டுக்குட்டியைப் போட்டுக் கொண்டு ஊரெல்லாம் தேடினானாம் என்கிற கதையாக, அது (மாமாவின் பிள்ளை) இருக்கும் போது ஒருவரைப் போய்ச் சொல்வானேன்?'' என்றாள் ருக்குவின் மாமியார்.

''ஏன், உங்கள் மாமாவின் பிள்ளை சங்கோஜி தானே?'' என்று கேட்டாள் சரோஜா.

''சங்கோஜமாவது, அப்படி இப்படி சங்கோஜமா? அதைப் போல அவ்வளவு சங்கோஜ பிராணிகள் இனி இந்த உலகத்தில் எதுவுமே இருக்காது. அடீயம்மா, என்னதான் சங்கோஜம் என்கிறாய்!'' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அகமுடையாளிடம் பிரீதியாக இருக்குமோலியோ?' என்றாள் சரோஜா.

''அது அவ்வளவு பிரீதியாகவும் யாரும் இருக்கமாட்டார்கள். ஆனால், வெளிக்கோ, இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்கிற மாதிரிதான் இருக்கும். திடீரென்று அதன் போக்கைப் பார்க்கிறவர்கள், இந்த உலகத்திலேயே அதற்குப் பற்று இருக்கிறதாகவே நினைக்கமாட்டார்கள். ஆனால், அதனவ்வளவு பற்றுதல் யாருக்குமே இருக்காது. பெண்டாட்டியைக் கண்ணில் காணக்கூடாதுபோல சிடு சிடுவென்று எதற்கெடுத்தாலும் கோபித்துக்கொண்டு உம்மென்றுகடுவன் பூனைமாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருக்கும். ஆனால், ஒரு செகண்டு பெண்டாட்டி கண் எதிரில் இல்லாவிட்டால், பிராணன் துடித்துப் போய்விடும் அதற்கு! எதுவாவது வேண்டுமானால் தைரியமாகப் பெண்டாட்டியைக் கேட்கலாமே. அது கிடையாது. அம்மாவைத்தான் கேட்டு வைக்கும். இந்தக் குறிப்பை அறிந்துகொண்டு பெண்டாட்டி, அதற்கு வேண்டியதைக் கொண்டு கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நரசிம்மாவதாரம் தான்! அந்த அசட்டு அம்மாவும்அதனுடைய நோக்கத்தைத் தெரிந்து கொள்ளாமல் தானே கொண்டு வந்து கொடுப்பாள்'' என்று ருக்குவின் மாமியார் சொல்லி முடிப்பதற்குள், 'அட அசடே' என்றாள் பானு.

'அம்மாவையா, பிள்ளையையா! யாரைச் சொல்கிறாய்?' என்றாள் சரோஜா.

'இரண்டையும்தான்' என்றாள் பானு.



''......திரும்பிக்கூடப் பார்க்காதது போல......''

'அம்மாகாரி ரொம்ப கர்னாடகம் பாவம். அதனுடைய நோக்கமெல்லாம் தெரியாமல், தானே பரிந்துகொண்டு செய்ய ஆரம்பித்துவிடுவாள். நாட்டுப் பெண் அகத்துக்கு வந்து 'கிட்ட தட்ட' ஒரு வருஷம் ஆகப்போகிறது. ஒரு நாளாவது அந்தப் பெண்ணை அந்தப் பிள்ளைக்குச் சாதம் போடச் சொன்னது கிடையாது. அறியாதது. சரியாக வயிறு நிரம்பப் போடுமோ போடாதோ என்றுதானேதான் பரிமாறுவாள். பிள்ளைக்கு இது என்னவோ பெரிய வேதனையாக இருக்கும். ஆனால்; அதை வெளிக்குத் காட்டிக்கொள்ளத் தைரியமிராது. 'அம்மா, சாதம் போடு' என்றுதான் கேட்கும். 'அம்மா' என்று சொல்வது மேலுக்கே ஒழிய, உள்ளுக்குள் பெண்டாட்டி போடவேண்டும் என்றுதான் அர்த்தம். ஆனால், அந்த அசட்டு அம்மாகாரி தானே சாதம்போட ஆரம்பித்துவிடுவாள்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'விஷத்தைச் சாப்பிடுகிற மாதிரிதான் சாப்பிட்டு வைக்கும் இல்லையா?' என்றாள் பானு.

'கேட்பானேன்? ஆபீஸிலிருந்து வரும். அகமுடையாள் அப்பொழுது எதிர்கொண்டழைக்காவிட்டால், ரௌத்ராகாரமாகக் கோபம் வந்துவிடும். அந்தப் பெண் வந்து நின்றதானால், முற்றும் துறந்த துறவி மாதிரி அந்தப் பெண்ணைத் திரும்பிக்கூடப் பார்க்காதது போலப் போய்க்கொண்டிருக்கும்! எதையாவது சாக்கிட்டுக் கொண்டு, அதை வைதுகொண்டிருக்கும். இந்த ரகத்தைச்சேர்ந்ததுபோல் இருக்கிறது மஞ்சுளாவின் அகமுடையான்' என்று ருக்குவின் மாமியார் சொல்லிக் கொண்டிருக்கையில், சரோஜாவின் அத்தை அங்கு வந்து சரோஜாவைக் கூப்பிட்டாள்.

'வந்த காரியத்தை முடிக்காமல் என்னமோ பேசிக்கொண்டிருந்துவிட்டோம். நாளைக்கு வந்து முடிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு எழுந்தாள் சரோஜா. ——

அத்தியாயம் 10

காபி, டிபன் சாப்பிட்டு விட்டு மறுபடியும் சேகரனை மனமாரத் திட்ட வேண்டும் என்று நடேசய்யர் பிளான் போட்டுவைத்திருந்தார். அவனை எப்படியெல்லாம் குத்திக் காட்டுவது, எப்படியெல்லாம் திட்டுவது என்று திட்டம்போட்டுக்கொண்டிருந்தார். நடேசய்யருக்குத் திடீரென்று ஒரு மனிதனை நன்றாக உறைக்கும்படி வையவேண்டுமென்றால் வராது. அதனால்தான் மனதிற்குள் இத்தனை ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தது. தம்முடைய கற்பனையின் பலத்தைக்கண்டு அவரே மிகுந்த ஆச்சரியப்பட்டார். அரைமணிநேரம் யோசனை செய்வதற்குள் ஒரு 'வசவு என் ஸைக்ளோபீடியா' அகராதி போடும் அளவுக்கு அவருடைய கற்பனை வேலை செய்துவிட்டது.

வசைமொழிகளையெல்லாம் பொழிந்து சேகரனைத் திக்குமுக்காடச் செய்யவேண்டும் என்று ஆவலுடன் உட்கார்ந்துகொண்டிருந்தார். ஆனால் ஒருமணி நேரமாகியும் சேகரன் வரக்காணோம்! கதவைத் திறந்துகொண்டு வெளியே வரலாம் என்று பார்த்தார். கதவு வெளிப்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது தெரிந்தது. கால் மணிநேரம் தொண்டைக் கிழியக் கத்திய பிறகு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் வந்து கதவைத் திறந்தான்.

'யாருங்காணும் நீர்? வெளிப்புறத்தில் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டுதான் உள்ளே உட்கார வேண்டுமா?'

'சேகரன் எங்கே? அந்த ராஸ்கல்தான் என்னை உள்ளே உட்கார வைத்துவிட்டு கதவைத் தாழ்ப்பாள்போட்டு விட்டுப் போயிருக்கிறான்!' என்று ஊளையிட்டார் நடேசய்யர்.

நடராஜனின் கண்கள் பளிச்சென்று பிரகாசித்தன. 'இதோ சேகரனுக்கு எதிராக ஒரு வலுத்த சாட்சியம் கிடைத்திருக்கிறது' என்று அவனுடைய அந்தராத்மா உறுதி கூறியது.

'திருடன்; திருட்டுப்பயல்! அந்த ராஸ்கல் என் வீட்டில் நகையைத் திருடிக்கொண்டு இங்கே வந்திருக்கிறான்! என்னைக் கண்டவுடனே தந்திரமாய் ஓடிவிட்டான்!'

'பேஷ்! பேஷ்!' என்று ஆமோதித்தான் நடராஜன். அதிருஷ்ட தேவதை இத்தனைநாட்களாய் தன்னை விரட்டிக்கொண்டேயிருந்திருக்கிறது என்பதை அவன் உணரவில்லை. என்ன மடமை!

'என்ன, ஐயா! பேஷ் பேஷ் என்கிறே?' என்று கடுமையாகக் கேட்டார் நடேசய்யர், தம்மை உள்ளே வைத்துச் சாத்திவிட்டு ஒரு மனிதன் போகும்போது அவர் பிறரிடமிருந்து ஒரு சொட்டுக் கண்ணீரையும் இரண்டு அனுதாப வார்த்தைகளையும் எதிர்பார்த்தார். "பேஷ், பேஷ்" என்பது நிச்சயமாய் அனுதாப வார்த்தைகளின் கோஷ்டியைச்சேர்ந்ததல்ல.

"மாமா, மாமா! இங்கே வாருங்கள்!" என்று ராவ்பகதூரைக் கூவியழைத்தான் நடராஜன்.

"இந்தக் கதையைக் கேளுங்கள்" என்று முன்னுரையுடன் நடேசய்யரைப் பேசச்சொன்னான் நடராஜன்.

நடேசய்யர் மிகுந்த வயிற்றெரிச்சலுடன் தன் கதையைச் செல்லிவிட்டுப், "பாருங்கள், ஐயா அநியாயத்தை! செய்ததெல்லாம் போதாதென்று என்னை நயவஞ்சகமாய் உள்ளேவேறு தள்ளிவிட்டுப் போய்விட்டான் திருட்டுப்பயல்! துரோகி!" என்று ஆத்திரத்துடன் கத்தினார்.

"அவன் எங்கேதான் போயிருப்பான்? என்ருர் பயங்கரம்.'

"எங்கே போயிருப்பாஞ? ஓடிப்போயிருப்பான்!'' என்ருன் நடராஜன். "மாமா! அந்தப் பயல் பி. ஏ. படித்துவிட்டு ஒரு பட்டிக்காட்டுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க வந்த போதே நான் சந்தேகப்பட்டேன். நம்மாத்திலும் எதையாவது கிளப்பிக் கொண்டு போயிருக்கப் போகிருன்!'' என்று மாமாவைக் கிளப்பி விட்டான்.

இதுவரை ராவ்பகதூர் சேகரனைப்பற்றி என்னவெல்லாமோ எண்ணினரேயொழிய திருடன் என்று மட்டும் எண்ணவில்லை. இப்போது அவர் மனதிலும் அந்த சந்தேகம் ஏற்பட்டது. உடனே அவருக்கு வைர அட்டிகை ஞாபகம் வந்தது. அவசர அவசரமாய்த் தம் அறைக்குச் சென்று பெட்டியைப்பார்த்தார். பெட்டி பூட்டியதுபோலத் தோன்றிற்றே யொழிய உண்மையில் திறந்திருந்தது. பெட்டிக்குள் இருந்த வைர அட்டிகையைக் காணேம்!

துஷ்யந்தன் உலகத்துக்கே ஒரு தனிப்பிறவி. அவனைப் போல ஈரேழு உலகங்களிலும் கிடையாது. அவனுடைய அழகுக்கு ஈடு அவனே தான். அவனுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு வெட்கி பிருகஸ்பதி பகவான்கூட இந்திரலோகத்தின் சீப்—அட்வைஸர் பதவியை ராஜிநுமா செய்துவிடக்கூடும்.........என்றெல்லாம் சகுந்தலை தன் காதலனைப்பற்றி எண்ணிப் பெருமை கொள்கிருள். அப்போது அனஸூயையும், பிரியம்வதையும் ஓடிவந்து, "சகுந்தலை! சமாச்சாரத்தைக் கேட்டாயா? உன் காதலனை அந்த ஆசாமி கண்வ மகரிஷியினுடைய வெள்ளி ஜாரியையும், ருத்ராக்ஷத்தையும், பூஜா பாத்திரங்களையும் திருடிக்கொண்டு போய்விட்டான்'' என்று சொல்லுகிருர்கள். அப்போது சகுந்தலை எந்தவிதமான மனே நிலையில் இருப்பாள்?

விசாலாக்ஷி இன்று கிட்டத்தட்ட அதே நிலையில்தான் இருந்தாள். வைர அட்டிகை கெட்டுப்போனது என்னவோ வாஸ்தவம். அதே சமயத்தில் சேகரன் சொல்லாமல்கொள்ளாமல் ஓடிப்போயிருப்பதும் வாஸ்தவம்தான். பெர்னர்ட்ஷா காதலையும் கல்யாணத்தையும் எவ்வளவு தூரம் பரிகாசம் செய்கிருர் என்று அவளுக்கு ஞாபகத்துக்கு வந்தது. பெர்னர்ட்ஷா சொல்லுகிருர் என்ருல் ஏன் சொல்லமாட்டார்? இதைப்போல காதலிக்கும் புருஷர்கள் வைர அட்டிகையைத் தூக்கிக்கொண்டு ஓடினுல்?..... ...ஆனல் சேகரன் திருடன் என்பது உண்மை தானு? ஒருகால் முன் காலத்தில் பக்தர்களைச் சோதிக்க பகவான் வருவதுபோல இன்றும் அவர் (பகவான்) மேற்படி வைர அட்டிகையை 'சட்' டென்று மறைந்து போகும்படி செய்திருப்பாரோ? இதுவும் முடியாத காரியம். ஆயிரம் வருஷங்களுக்கு முன்னல் இப்படி நடந்திருந்தால் நம்பலாம். அந்தக்காலத்தில் பகவான் வந்து ஜனங்களின் பக்தியைச் சோதித்துப்பார்ப்பது வழக்கம். இப்போது ஜனங்களல்லவா பகவான் இருக்கிருரா என்று தேடிப் பார்க்கிருர்கள்? இந்தப் புது சகாப்தம் (கடவுளைத் தேடும் சகாப்தம்) ஆரம்பமான பிறகு கடவுளே பக்தர்களைச் சோதனை செய்யும் 'போர்ட்போலியோ' வை (வேலை) உதறிவிட்டுப் போய்விட்டார்! அதனுல் (விசாலாக்ஷியின் ஆராய்ச்சி இது) பகவான் வைர அட்டிகையை அமுக்கியிருப்பது முடியாத காரியம்.

நடேசய்யர் சொல்லிக்கொண்டிருந்தார். "வம்சத்துக்கே இல்லாத புதுமை. என் வீட்டில் இரண்டு வருஷம் வளர்ந்தவன் என் பூணூலையே அறுத்துச் சாவியை எடுத்து ஒரு பத்து பவுன் சங்கிலியை எடுத்துக்கொண்டு ஓடிப் போய்விட்டான்''

பயங்கரம் நடேசய்யரிடம் பூரணமாக அனுதாபம் காட்டினுர். அவரையும் அறியாமல் அவருடைய கை பூணூலைத் தேடிப் பார்த்தது. பூணூல் பத்திரமாகத்தான் இருந்தது!

வைத்தாவுக்கு சிரிப்பு வந்தது. சேகரனுடைய ஹாஸ்ய மனேபாவத்தில் அவனுக்கு எப்போதுமே நம்பிக்கை உண்டு. இப்போது அது பன்மடங்காக விருத்தியாயிற்று.

"நீங்க பால விருச்சிக நாடக சபையைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கேளா ஸார்?'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தான். "அதிலே ரொம்ப நாள் வேலை செய்துவிட்டு ரிடையர் ஆன சிவ பூஷணம் என்பவருக்கு ஒரு பண முடிப்பு கொடுக்க வேணும் என்று நினைத்தார்கள். அதுக்காக சூதாட்டம் என்று ஒரு நாடகம் போட்டார்கள். ஆனல் அதில் பணம் என்னவோ பத்து ரூபாயும், ஏழே முக்காலணுவும்தான் சேர்ந்தது. அது கிடக்கட்டும். அந்த நாடகத்தில் சூதாட்டத்தில் மும்முரமாக ஈடுபட்ட ஒரு புருஷன் தன் மனைவியினுடைய கழுத்துத் தாலியை முதலில் ஒரு கத்தியால் நறுக்கிப் பார்க்கிருன. கத்தி வெண்ணெய் வெட்டும் கத்தியாக இருக்கவே பிறகு அரிவாமணையைக் கொண்டு வந்து நறுக்குகிருன். அந்த ஸீனில் எவ்வளவு அப்ளாஸ் தெரியுமா?...''வைத்தா மேற்படி நாடகத்துக்கு

நினைவுக்கு வரவே மறுபடியும் சிரிக்கத் தொடங்கினான்.

நடேசய்யருக்கு ஆத்திரமாக வந்தது. "அந்த நாடகத்தில் நீங்கள்தான் வேஷம் போட்டுக் கொண்டீர்களோ?"

"இல்லை, இல்லை. அந்த நாடகம் நடக்கும் போது நான் கிருஷ்ணா கபேயில் இல்லை, ஹரோ ஹரா லாட்ஜில் வேலைக்கு இருந்தேன். அந்த நாடகத்திலே சோமு என்கிற பாத்திரமாக நடித்த முகாரி கிட்டுவய்யருக்கு நல்ல 'பெர்ஸனலிடி' அதைப் பார்த்துவிட்டுத்தான் நீங்கள் நான்தான் நடித்தேனோ என்று சந்தேகப்படுகிறீர்கள்போலிருக்கிறது. என்னை அசப்பிலே பார்க்கிறவர்கள் நான்தான் முகாரி கிட்டுவய்யரோ என்று நினைத்துவிடுகிறார்கள். அந்த மனுஷன் முகாரியை ஆரம்பித்தால் நாலு நாளைக்கு நிறுத்தமாட்டான்..."

பயங்கரம் வைத்தாவின் பேச்சைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

'வைத்தா! இன்னிக்கு சாயங்காலம் வா. மூனு மாதத்துச் சம்பளத்துக்கு ஒரு செக் தரேன். நீ ஹரோ ஹரா லாட்ஜுக்கோ இல்லாவிட்டால் கோவிந்தா லஞ்சு ஹோமுக்கோ போய்ச் சேரு. உன் நாடக சமாசாரங்களை நீ சொல்லுகிறதை ஒழித்தால்தான் நீ உருப்பட முடியும்."

வைத்தாவுக்கு இது பெரிய இடி. இந்த நாடக மேடை அனுபவங்களைச் சொல்லுவதுதான் அவனுடைய ஜன்ம லட்சியம் என்று எண்ணியிருந்தான். ஒழிந்த வேளையில் சமையல் தொழில். அவனுக்கு இதைப்போன்ற தடை விதிப்பது இரண்டாவது சந்திரகுப்த விக்கிரமாதித்யர் காளிதாஸனைக் கூப்பிட்டு, "ஐயா காளிதாஸரே! இந்தக் காவ்ய நாடகாதிகளுக்கு முழுக்குப் போட்டுவிட்டு நீர் பிள்ளையார் கோயில் பூஜை செய்ய ஆரம்பியும்!" என்பதைப் போல் இருந்தது.

நடராஜன் சொன்னான். "நாலு நாளாகவே அவன் உங்கள் அறைமேல் ஒரு கண் வைத்துக் கொண்டிருந்தான். உங்கள் அறைக்குள் என்ன இருக்கப் போகிறது? கதைகள்தானே எழுதி வைத்திருக்கிறீர்கள்? உங்கள் கதைகளைத் திருடிக்கொண்டுபோவதற்காக உங்கள் அறையை முற்றுகை போடுவானோ என்ன என்று நினைத்துவிட்டேன். பி. ஏ. படித்தவன் இப்படித் திருடப் போகிறான் என்று நான் எண்ணவில்லை."

சீமாச்சு தன் சாட்சியத்தைச் சேர்த்தான். "உங்க அப்பா சாவிக்கொத்தை எங்கே வைப்பார், தெரியுமா என்று நாலு நாளைக்கு முன்னால் என்னைக்கேட்டார், அப்பா! சொன்னால் எனக்கு

ஒரு பவுண்டு பெப்பர்மிண்ட் கொடுப்பதாகச் சொன்னார். நான் எனக்குத் தெரியாதுன்னு சொல்லிவிட்டேன்'' (இந்த வார்த்தைகளைத் தட்டுக்கெடாமல் சொல்லியதற்காக சீமாச்சுவுக்கு அன்று சாயங்காலம் நடராஜனிடமிருந்து ஒரு பவுண்டு பிஸ்கட் கிடைத்தது!)

இந்த விவகாரங்களில் பாலுசாமி தலையிடவில்லை. கேட்ட சமயங்களில் கடன் கொடுத்துவிட்டு திருப்பிக்கூடக் கேட்காமலிருந்த மகானுபாவன் மறைந்துவிட்டானே என்ற துக்கத்தில் அவன் ஆழ்ந்திருந்தான்! சேகரன் உண்மையில் திருடியிருந்தாலும் சரி, திருடியிராவிட்டாலும் சரி அவன் எப்போதும் பாலுசாமியின் நண்பன். அவனுக்குத் தன்னாலான ஒத்தாசையைச் செய்ய வேண்டும்.

நடராஜனின் ஆலோசனைப்படி ராவ்பகதூர் பயங்கரம் மேலாபுரம் போலீஸுக்குத் தெரிவித்தார். போலீஸுக்கு சேகரனுடைய அங்க அடையாளங்களைத் தெரிவித்தார். அத்துடன் நிற்காமல் சேகரனுடைய அடையாளங்களைத் தெரிவித்து, அவன் வைர அட்டிகை திருடியதையும் சொல்லி அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனும் வழங்கப்படும் என்றும் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்தார்.

மேலாபுரம் போலீஸுக்குச் சாதாரணமாய் 'ந்யூஸன்ஸ்' சார்ஜ் எப்போதாவதும் ஓவர்லோட் போகும் சைக்கிள் கேஸ் மாமாங்கத்துக்கு ஒரு முறை திருட்டுத்தனமாகத் தேங்காய் பறித்த குற்றம் இவற்றைப் போன்ற வழக்குகள்தான் வருவது. இன்று வைர அட்டிகை திருட்டுப் போயிருப்பதாகத் தகவல் கிடைத்தவுடன் அந்த ஊர் ஸப் இன்ஸ்பெக்டர் தம் தலைப்பாகையை எடுத்து மிகவும் பெருமையுடன் வைத்துக் கொண்டார்.

அவருடைய மனக்கண்ணின் முன்னால் தாம் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பிரமோஷன் ஆவதையும், ராஜதானியிலிருக்கிற அத்தனை ஸப் இன்ஸ்பெக்டர்களையும் துச்சமாக நினைத்துக் கொண்டு ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு போவதையும் கவர்னர் ஜெனரல், மந்திரிகள், கவர்னர் இவர்களுடன் விருந்து சாப்படுவதையும் பார்த்தார்.

ஸப் இன்ஸ்பெக்டர் கதலீபுரத்திற்குச் சென்று இரண்டுமணி நேரம் குறுக்கு விசாரணை செய்தார். தோட்டத்திலிருக்கும் குளத்திற்கும் வீட்டிற்கும் உள்ள தூரத்தை அங்குலத்



1

பிறந்த நாள்! பிறந்த நாள்! பிறந்த நாள்!
இந்தி யத்தாய் பெற்றெ டுத்த
எங்கள் கவர்னர் ஜெனரலாம்!
எளிய வாழ்வைக் கடைப் பிடித்து
இலங்கும் கவர்னர் ஜெனரலாம்!
நந்த மிழ்மேல் பற்று மிக்க
ராஜா ஜிக்குப் பிறந்த நாள்
நல்டி சம்பர் ஒன்ப தாம்நாள்
நாம்கொண் டாடி மகிழுவோம்! (பிற)

2

அன்னார் நீடு வாழ்க வென்று
அன்னை தன்னை வணங்குவோம்!
அல்லல் விட்டு இன்ப மெய்த
அன்பாய் நின்று வணங்குவோம்!
பொன்னும், மணியும் நமது நாட்டில்
பொலிக வென்று வணங்குவோம்!
பூத லத்தில் பார தத்தாய்
புகழ்ச்சி தன்னை விரும்புவோம்! (பிற)

துக்குச்சரியாக அளந்தார் — வாசற்பக்கத்துக் கதவை பூதக்கண்ணாடி வைத்துக்கொண்டு சோதித்துப் பார்த்தார். திருட்டுப்போன அறைக்குள் உட்கார்ந்துகொண்டு டிபன் சாப்பிடும்போது அங்குள்ள ஒவ்வொரு வஸ்துவையும் ஆழ்ந்து கவனித்தார். பயங்கரம் அந்த அறைக்குள் எழுதிவைத்திருந்த கதைகளைக்கூட ஒரு வரி விடாமல் படித்துப் பார்த்தார்.

கடைசியாக அவர்! "வைர அட்டிகை கெட்டுப் போனது உண்மைதான், அது திருட்டுப் போயிருக்க வேண்டும்" என்ற புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்தார்.

'திருடிக்கொண்டு போனவன் சேகரன்தான்' என்று அவருடைய பதினைந்து வருஷத்து போலீஸ் அனுபவம் சொல்லிற்று. தலைமைக் காரியாலயத்திற்கு, திருட்டுப்போன தகவலைத் தெரிவித்துவிட்டு, 'எப்படியாவது இந்தத் திருடனைக் கண்டுபிடித்துவிட்டு ஸப் இன்ஸ்பெக்டர் அந்தஸ்திலிருந்து இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவிக்குத் தாவிவிடவேண்டும்' என்று மானஸீகத் திட்டம் வகுத்துக்கொண்டார்.

(தொடரும்)



9

பாதரட்சை மான்மியம்

★

'சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரியான பண்டித நேருவைக்குறித்துஎப்போதுமேபத்திரிகைகளில் செய்தி அதிகம்தான். இப்போதோ, இவரது அறுபதாவது பிறந்தநாள் வைபவத்தை ஒட்டிப் பத்திரிகைகளெல்லாம் நேரு மயமாகவே இருக்கின்றன' என்று சொல்லிக்கொண்டே விரைந்து வந்தாள் கமலா.

கமலா உட்கார்ந்துகொண்டு மூச்சையும் சரிப்படுத்திக்கொண்டபின், மறுபடியும் வாசலுக்குப் போய்த் திரும்பிவந்தாள். விரைவாகப்போய் வந்து மறுபடியும் மூச்சை சரிப்படுத்திக்கொண்டு, 'எங்கும் நேருவின் செய்திதான்' என்றாள் எங்களை நோக்கி.

'நீ பத்திரிகைகளில் பார்த்த ஏதாவது ஒரு ரஸமான நேரு செய்தியைச் சொல்லு, பார்க்கலாம்' என்றாள் ஸரோஜா.

'அதுவா?' என்று சொல்லிக்கொண்டே, வாசலை நோக்கிப் பரிதாபமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'புதிய டில்லியில் காந்தி மைதானத்திலே நேருஜி சீக்கியர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்யப் போனாரல்லவா, குருநானக் ஜயந்தியை ஒட்டி?' என்று மறுபடியும் எங்களைப் பார்த்தாள். இந்தப் பார்வையும் பரிதாபமாயிருந்தது.

'ஏது, வருத்தமான செய்தி ஒன்றும் இல்லையே? நேருஜி சீக்கியர்களுக்கு நல்ல புத்திதானே சொன்னார்? மற்ற இந்தியர்களோடு ஐக்கியமாக வாழும்படியாகச் சொன்னார்—அப்படித்தானே'' என்றேன் நான்.

நேருஜியின் பாதரட்சை

'வருந்தத்தக்க செய்தி தான்! ஐக்கியமாக வாழச் சொன்னால், ''நீயும் நானும் ஒன்று, உன் செருப்பும் என் செருப்புத்தான்!'' என்று எண்ணிவிடலாமா? இது என்ன ஐக்கியமோ! என்றாள் கமலா.

எங்களுக்கு முதல் முதல் ஏதோ புதிர்போட்ட மாதிரி இருந்தது. கமலாவோ எங்களைப் பார்ப்பதும், வாசலைப் பார்ப்பதுமாயிருந்தாள்.

'அது என்ன அம்மா! செருப்புக் கதை?' என்று ஸரோஜா கேட்டதும், கமலா தன் கையிலிருந்த ஆங்கிலச் செய்தித்தாளை நீட்டி அதில், ''புதிய செருப்புகளுக்கு ஈடாகப் பழைய செருப்புகள்'' என்ற தலைப்பிற்கும், ''புதிய டெல்லி, நவம்பர்-16-'' என்ற முகவரிக்கும் கீழே, 13-வரிகளில் ஒரு தந்திச் செய்தி வெளியிட்டிருந்ததைச் சுட்டிக்காட்டினாள்.

'அது என்ன பண்டமாற்று?'—புதிய செருப்பும் பழைய செருப்பும் என்று நான் அதைப் படித்துப் பார்த்தேன். ஸரோஜாவோ என்னோடு தலைப்பை மட்டும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'இது தான் எனக்கு ஏற்கெனவே தெரியுமே?' என்ற பீடிகையுடன், 'நமது பிரதம மந்திரி தமது புதிய பாதரட்சைகளைப் புதிய டில்லியில் காந்தி மைதானத்திலே சீக்கியர்களுக்குப் பிரசங்கம் செய்யும்போது இழந்துவிட்டார். புதிய செருப்புகளின் ஸ்தானத்தில் ஒரு ஜோடிப் பழைய செருப்புகள் இருந்தன. செருப்பில்லாமலே அவர் வெறுங்காலுடன் காரில் ஏறிக்கொள்ளவேண்டியதாயிற்று. ஆகவே.........' என்று சொல்லிக்கொண்டே போனாள்.

'கதையும் சொல்லிப் படிப்பினையும் சொல்லப்போகிறாய். ''ஆகவே செருப்பையோ ஜோட்டையோ கழற்றிவிடாமல் எப்போதும் காலிலேயே அணிந்திருக்க வேண்டும்'' என்று தானே சொல்லப் போகிறாய்? ''அப்படியானால் நம்முடைய கமலா அடிக்கடி வாசலைப் பரிதாபமாய் பார்க்க வேண்டிய காரணமும் ஏற்படாது. அந்தக் கவலையே ஏற்பட்டிராது'' என்றும் நினைக்கிறாய்.—சரிதானே?' என்றேன் நான்.

அதற்கு ஸரோஜா, 'அதுதான் என் நினைப்பு. பண்டிதநேருவும் அப்படியே நடந்துகொள்ளக்கூடியவர்தான். ஆனால் ''குரு கிரந்த ஸாகிப்'' என்ற சீக்கிய சமய நூல் வைக்கப் பெற்றிருக்கும் இடத்திற்குச் செல்வதற்குமுன் ஜோடுகளைக் கழற்றிவிட வேண்டுமே என்ற மரியாதையை அனுஷ்டித்தார் நேருஜி. ''பக்திக்கு அபராதம் பாதரட்சை!'' என்ற கணக்கிலே பலன் கிடைத்துவிட்டது! என்று பதில் சொன்னாள்.

'குரு கிரந்த ஸாகிப்'

'இது இருக்கட்டும். அது என்ன "குரு கிரந்த ஸாகிப்"? சமய கிரந்தமாகிய நூலுக்கும் இப்படி பட்டம் பதவிகள் உண்டா?' என்று கேட்டாள் கமலா.

'ராமாயணத்தை ஸ்ரீமத் ராமாயணம் என்று சொல்லுகிறோமல்லவா?' என்றாள் ஸரோஜா.

'அது சரி ஒரு நூலைக் "குரு" "ஸாகிப்" என்ற இரண்டு பட்டங்களுடன் குறிப்பிடுவது உண்டென்பது இந்தச் செய்தியைப் படித்த பின்புதான் எனக்குத் தெரிய வந்தது' என்றாள் கமலா.

'சீக்கியர்கள் தங்கள் பத்தாவது குருவான குருகோவிந்தரையே தங்கள் இறுதிக் குருவாகக் கொண்டார்கள். அவருக்குப்பின் குரு பீடத்தில் மனிதர் ஒருவரும் அமர வேண்டாமென்று தீர்மானித்தார்கள். ஆதி குருவான குரு நானக் தொடக்கமாய் வந்த குரு பரம்பரையைச் சார்ந்த பதின்மர் செய்திருக்கும் உபதேச ரத்தினங்களின் களஞ்சியமான உத்தம கிரந்தம், குருபீடத்தை அலங்கரிப்பதே நலமெனத் துணிந்தார்கள். ஆகவே, குருமார்களைக் "குரு கோவிந்த ஸாகிப்" என்றெல்லாம் போற்றியதுபோல், குருபீடத்தை அலங்கரித்த கிரந்தத்தையும் "குரு கிரந்த ஸாகிப்" என்று கௌரவித்தார்கள் என்றேன் நான்.

'சரி சரி, "குரு கிரந்த ஸாகி"பைக் கௌரவிக்கத்தான் பண்டித நேருவும் பாதரட்சையைப் பறிகொடுத்தார். போனால் போகிறது: ஆனால் அந்தச் செருப்புத் திருடனுக்கு லாபம்தான். என்ன பிரமாதமாய்க் கிடைத்துவிட்டது? அவன் தன் 'மானுடம்' (humanity) என்ற கௌரவத்தைப் பறிகொடுத்துவிட்டானே! ஸரோஜா நினைக்கிறபடி அவனுக்கு ஏதோ லாபம் கிடைத்துவிட்டதென்று நான் நினைக்கவில்லை, என்றாள் கமலா.

பெண்களும் செருப்புக் கவலையும்

இப்படிச் சொல்லிவிட்டுக் கமலா மீண்டும் ஒரு பரிதாபப் பார்வையை வாசல் பக்கமாகச் செலுத்தியதும், ஸரோஜா மின்னல் போலப் பாய்ந்து போய், கமலாவின் புதிய ஜோடுகளை வாசற் புறத்திலிருந்து எடுத்து வந்து உள்ளே ஒதுக்குப் புறமாய் ஒரு மூலையில் வைத்துவிட்டுத் திரும்பினாள்.

'இனி வெறுங் காலுடன் வீட்டுக்குத் திரும்ப வேண்டியிருக்குமோ என்ற பயம் உனக்கு இல்லை: வேறு யாரோ தன் மானுட கௌரவத்தை இழந்து விடுவானோ என்ற பயமும் இனி உனக்கு வேண்டியதில்லை!' என்றேன் நான்.

பிறகு எங்கள் பேச்செல்லாம் கொஞ்ச நேரம் பாதரட்சைக் குறித்த பேச்சாகவே இருந்தது. 'எத்தனையோ கவலைகளை விட்டுவிட்டாலும்கூட இந்தச் செருப்புக் கவலையை உதறி விடுவது கஷ்டம் தான்—அதாவது செருப்பைக் காலில் போட்டுக்கொண்டேயிராமல் கழற்றி வெளியே போட்டிருந்தால்!' என்றாள் ஸரோஜா.

அதற்குக் கமலா, 'இந்தச் செருப்புக் கவலையெல்லாம் பெண்களுக்குச் சமீபகாலத்திலிருந்து தான் ஏற்பட்டிருக்கிறது. பாட்டிமார் காலத்தில் பெண்களுக்குச் செருப்பும் கிடையாது, குடையும் கிடையாது, அந்தக்கவலைகளும் கிடையாதாமே! என்றாள்.

'குடை, பாதரட்சைகளின் உபயோகங்கள் கூட அந்தக் காலத்துப் பெண்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டாள் ஸரோஜா.

'ஏன் தெரியாது? "பாதரட்சையின் உபயோகங்கள் எவை?" என்று கேள்வி கேட்டால், "(1) சூடு ஏறாது: (2) கல் உறுத்தாது: (3) காலில் முள் தைக்காது: (4) காலில் அசுத்தம் படாது: (5) எனினும் பெண்கள் உபயோகிக்கத்தகாதது" என்றெல்லாம் பாட்டிமார்களும் சொல்லிவிடுவார்கள். "இவ்வளவு உபயோகமுள்ள பாதரட்சைகளை பாதங்களுக்கு ரட்சையாகப்பெண்கள் ஏன் தானே அணிந்து கொள்ளலாகாது?" என்று கேட்டாலும் பாட்டிமார்களுக்குப்பதில் சொல்லத் தெரியும்!' என்றேன் நான்.

'உபயோகங்கள் தெரிந்திருந்தும் உபயோகிக்கத் தெரியாததற்குக் காரணம் என்ன தான் சொல்லமுடியுமோ?' என்றாள் கமலா.

'வழக்கமில்லை, அனுஷ்டானமில்லை என்றுதான் சொல்வார்கள். அந்தக்காலத்திலும் தற்காலகல்வி கற்றிருந்த சிற் சில இந்துப் பெண்கள் ஜோடுகளும் அணிந்து கொண்டார்கள். அவர்களைக் கண்டால் பாட்டிமார்கள், "ஏன் இந்தப் பிலுக்கும் மினுக்கும் துரைசானி போல?" என்று எண்ணிக் கொள்வார்கள். தங்களுக்குள்ளே பேசிக் கொள்ளவும் செய்வார்கள் என்றேன் நான்.

பாதரட்சையின் வேறு உபயோகம்

திடீரென்று ஸரோஜா, எனக்குப் பாதரட்சையின் வேறு சில உபயோகங்களும் தெரியுமே சொல்லட்டுமா?' என்று கேட்டுவிட்டு எங்கள் அனுமதியையோ பதிலையோ எதிர்பாராமல், பாதரட்சையை யார்மேலேயாவது வீசலாமல்லவா? என்றாள்.

'சில அரசியல்-குழப்பங்களைக் குறிப்பிடுகிறாயா? அல்லது கோபத்தை அடக்கமுடியாமல் அந்த அடாத காரியத்தைச் செய்யும் அரசியல் வாதிகள் அல்லதா மூர்க்கர்களைக் குறிப்பிடுகிறாயா?' என்று கேட்டாள் கமலா.

'இரு வகை மக்களையும் குறிப்பிடுகிறேன்' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து, 'பாதரட்சை வீசுகிறவர்களையெல்லாம் "மூர்க்கர்" என்று குறிப்பிடுவதை வன்மையாகக் கண்டிருக்கிறேன்' என்றாள் ஸரோஜா.

'ஏன்?' என்று கமலா கேட்டதற்கு ஸரோஜா, 'காங்கிரஸ் சரித்திரத்திலே படித்திருக்கிறேன்: 1907-ல் புதிய தீவிரவாதக் கட்சி



யினரும் பழைய மிதவாதக் கட்சியினரும் சூரத்துக் காங்கிரஸை ஒரு போர்க்களமாக்கிவிட்டனராம். அந்தப் போராட்டத்திலே போர்க்கருவிகளாகப் பாதரட்சைகளும் உபயோகிக்கப் பெற்றனவாம்' என்று பதில் சொன்னாள்.

'காங்கிரஸ்காரர்களில் யாரோ சிலர் அப்படிச் செய்தார்களென்றால் அவர்களும் மூர்க்கர்களே! என்றேன் நான். யார் செய்தாலும் தவறு தவறுதான். சிவபெருமான் குற்றம் செய்ததாகக் கருதிய நக்கீரர் "குற்றம் குற்றமே!" என்று சொல்லிவிடவில்லையா?' என்றாள் கமலா.

செருப்படியும் உகப்பானது

'பொறு, பொறு. சூரத்துக் காங்கிரஸைமட்டும் நான் குறிப்பிடவில்லை. பொதுவாகவும் சொல்கிறேன். சிற்சில சமயங்களில் கோபமும் தர்மாவேசம் ஆகலாம்; அபூர்வமாகச் செருப்படியும் உகப்பிற்கு உரியதாகலாம்' என்றாள் ஸரோஜா.

'நீ கண்ணப்ப நாயனார் கதையைத்தான் குறிப்பிடுகிறாய். தெரியாதா எனக்கு? அந்த நாயனார் தம் செருப்படியை-அதாவது செருப்பு அணிந்த அடியை-சிவலிங்கப்பெருமான்மீது படும்படி வைத்துக்கொண்டு தம் கண்ணைத் தோண்டி அந்தப் பெருமானுக்குஅளிக்கமுயன்றாரல்லவா? இந்தப் பக்திக்கதையை வைத்துக் கொண்டுதான் பண்டிதர்கள், "சிவ

பெருமானும் செருப்படியை உகந்தார்" என்று பொருள்படச் சொல்வதுண்டு. இது பழைய, புளித்துப் போன சிலேஷை! தெரியாதா எனக்கு? என்றாள் கமலா.

'நான் கண்ணப்ப நாயனாரையும் சிவபெருமானையும் குறிப்பிடவில்லையம்மா! ஒரு **மனிதருடைய** செருப்படியை வேறொரு **மனிதர்** உகந்து பாராட்டியதைத்தான் சொல்லப் போகிறேன். இருவரும் பெரிய மனிதர்கள். மேலே சொல்லட்டுமா, வேண்டாமா?' என்றாள் ஸரோஜா.

'சொல்லு, சொல்லு' என்று கமலா ஆத்திரப்படுத்த, 'செருப்பை வீசியவர் பண்டித **ஈசுவர சந்திர வித்தியாஸாகரர்** என்ற வங்கநாட்டுப் பெரியார், அந்தச் செருப்படியைப் "பாக்கியம்" என்று பெற்று மகிழ்ந்தவரும் ஒரு பிரசித்திபெற்ற வங்க அறிஞரான ஒரு 'சிறந்த நடிகர்' என்றாள் ஸரோஜா.

நாங்கள் இருவரும் அந்தக் கதையை அறிந்து கொள்ள விரும்பினோம். ஸரோஜா சொன்ன தன் ஸாரம் இது: வங்க நடிகர் ஒரு நாடகத்திலே அவுரித்தோட்ட மானேஜர் ஒருவராக நடித்தார். அந்த கர்வம்பிடித்த மானேஜர் தொழிலாளிகளை மிகவும் கொடுமையாக நடத்தினான். அந் நடிப்பிலே நடிகர் தம்மை முழுக்க இழந்துவிட்டார். இரக்கமில்லாத மானேஜரின் அரக்கத் தன்மையை அப்படியே கண்டதும், வித்தியாஸாகரருக்குக் கோபம் பொங்கிவிட்டது. திடீரென்று அந்த உணர்ச்சியின் உச்சநிலையில், பண்டித மணியும் ஜீவகாருண்ய சீலருமான வித்தியா ஸாகரரின் கை, காலிலுள்ள செருப்பைக் கழற்றி 'மானேஜர்' மீது வீசிவிட்டது! நாடகம் பார்த்தவர்கள் நடுங்கிப் போயிருப்பார்கள். ஆனால், அறிஞரான நடிகருக்கோ பரம ஸந்தோஷம்–தத்ரூபமாகத் தாம் 'கொடிய மானேஜ'ராகி நடித்ததை எப்படி, ரஸித்துவிட்டார் வித்யாஸாகரமாகிய ஈசுவர சந்திரர் என்று. அதற்குமுன் எத்தனையோ பரிசுகளும் பதக்கங்களும் பெற்றவர் தான்: எனினும் நடிகர் அந்தப் பாதரட்சையையே 'கலைக்கடல் அளித்த தனிப்பெரும் பரிசு' என்று போற்றி நினைவுக்குறியாக வைத்துக்கொண்டாராம்.

கதையை மனம் உருகிக் கேட்டோம் கமலாவும் நானும். 'என்ன ஸரோஜா! பூக்களையும் பூமாலைகளையும் தம்மீது வீசியிருந்தாலும் அப்படிப் பாதரட்சையை வீசியது போல் ரஸிகத் தன்மையை வெளியிட்டதாகுமா?' என்று வியந்தேன் நான். கமலாவோ, 'இந்தக் கதையைப் பிரசாரம் செய்யாதே' மூர்க்கர்களும் வேண்டாதவர்கள் மீது செருப்பை வீசிவிட்டு "நாங்களும் வித்யா சமுத்திரங்கள்! நீங்களும் அந்த நடிகரைப்போல்? கலா ரஸிகர்களாய் இருக்கவேண்டும்!" என்று சொல்லவும் கூடும்' என்று சிரித்தாள்.

பிறகு ஸரோஜா, 'பண்டித நேருவைப் போல் பண்டித ஈசுவர சந்திரரும் பாதரட்சையை இழந்துவிட்டார்—இல்லையா?' என்று கேட்டாள்.

'ஆம் ஒரு பாதரட்சையையாவது பண்டித வித்யாஸாகரர் இழந்திருக்கவேண்டியதுதான்: நடிகர்தான் "நினைவுக்குறி" என்று சொல்லி அபகரித்துக்கொண்டு போய்விட்டாரே!' என்றாள் கமலா.

ராம ராவணர் பாதரட்சை

பண்டித நேருவின் பாதரட்சையும் பண்டித ஈசுவரசந்திரரின் பாதரட்சையும் எங்களுக்கு வேறு சில சரித்திரப் பிரசித்தி பெற்ற பாதரட்சைகளையும் ஞாபகப்படுத்தின.

'ஸ்ரீ ராமனுடைய பாதரட்சையைப் பரதன் "நினைவுக்குறி" என்று அபகரித்துக்கொண்டு போகவில்லையா?' என்றாள் கமலா.

'திருவாளர் ராவணேச்வரனுடைய மணி பாதரட்சையைத் தெய்வப் பெண்மணியாகிய திலோத்தமை தலையில் தாங்கிக் கொண்டு போனதாய்க் கம்பர்,

செருப்பினைத் தாங்கித்
திலோத்தமை செல்ல

என்று வருணிக்கவில்லையா?' என்றாள் ஸரோஜா.

'திலோத்தமை பரதனைப் போலவோ, வங்க நடிகரைப் போலவோ, பண்டித நேருவின் செருப்புத் திருடரைப் போலவோ, ராவணேச்வரனுடைய பாதரட்சையை அபகரித்துக்கொண்டு போகவில்லை — அபகரித்துக் கொண்டு போயிருக்கவும் முடியாதல்லவா?' என்றாள் கமலா.

'அது இருக்கட்டும். அது என்ன, அந்த ராவணசக்கரவர்த்தி அப்படித் தன் பாதரட்சையைத் திலோத்தமையே தலையில் சுமக்க விட்டுப் பெருமை அடைந்தான்? "மானுடம்" என்ற கௌரவத்தைச் சக்கரவர்த்திகளும் இழந்து விடுகிறார்கள்; பிறரிடமிருந்தும் பறிமுதல் செய்கிறார்கள்!' என்றாள் ஸரோஜா.

'மானுடம் என்ற கௌரவம் இங்கே வருவதற்கும் இடமில்லை, போவதற்கும் இடமில்லையே? ராவணன் ராட்சஸன்: திலோத்தமையோ தேவமாது!' என்றாள் கமலா.

'ராவணன் திராவிடன் இல்லையா?' என்று சிரித்தாள் ஸரோஜா.

'சரித்திர காலத்திலும் ஒரு சக்கரவர்த்தி தம் பாதரட்சையின் மான்மியத்தை உணர்ந்து கௌரவித்தார். பரதன் ராமனுடைய பாதரட்சையைச் சிங்காசனத்தில் ஏற்றி வைத்தானென்றால், இந்த மொகலாய சக்ரவர்த்தி தமது பாதரட்சையைப் பல சிங்காசனங்களிலும் ஏறிப் பவனி வருமாறு செய்வித்தார்!' என்றேன் நான்.

இந்தக் கதையை ஸரோஜாவும் கமலாவும் கேட்க விரும்பினார்கள். நேரமாகிவிட்டதால் அடுத்த தடவை சொல்வதாக வாக்களித்தேன்.

ராமன் ஒரு போர் வீரனின் மகன். அவன் ஐந்து வயது சிறுவனாயிருக்கும் போது அவன் தந்தை யுத்தத்தில் இறந்து விட்டார்.

ராமன் அவன் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. அரசன், ராமனுக்கும், அவன் தாய்க்கும் வேண்டிய செல்வத்தைக் கொடுத்திருந்தான். தந்தையற்ற ராமனும் தாயினுடைய போஷணையிலே இருந்து வந்தான்.

ராமனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கும் அரசன் ஏற்பாடு செய்திருந்தான். அவன் படித்து முடிந்ததும், தன் அரச சபையிலேயே அவனுக்கு ஒரு நல்ல உத்யோகம் கொடுக்க வேண்டும் என்று அரசன் எண்ணியிருந்தான். அவ்வளவு தூரம் ராமன் தந்தையும் அரசனிடத்தில் விசுவாசமாக இருந்து இறந்துபோனார்.

ராமனுக்கோ படிப்பில் கவனம் செல்லவில்லை. கோலிக் குண்டு, கிட்டிப் புள் முதலியவிளையாட்டுகளை சாப்பிடக்கூட நேரமில்லாமல் விளையாடி, படிக்காமல் வீணாக நாட்களைக் கழித்துக் கொண்டு வந்தான்.

அவன் தாய் மட்டும், அவன் படிக்காமல், திரிந்து கெட்டுப் போகிறானே என்று அடிக்கடி கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள்.

“ஏண்டா! இப்படியே விளையாடிக்கொண்டிருந்தால்,நீ எப்பொழுது படித்து உன் தகப்பனாரைப்போல் முன்னுக்கு வருவது? படித்தால்தானே அரசாங்கத்தில் பெரிய சேவகம் செய்யலாம்” என்று எத்தனையோ தடவைகளில் புத்திமதிகள் சொல்லிப்பார்த்தாள். ராமன் தாயின் புத்திமதிகளைக் கொஞ்சங்கூடக் கவனிக்கவில்லை.

திரிந்து விளையாடிக் கொண்டே, ராமன் பதினாறு வயது பையனாக வளர்ந்து விட்டான்.

திடீரென்று ஒருநாள் அந்த ஊர் அரசன் மார்பு அடைப்பால் இறந்துவிட்டான். அவனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தார்கள். இறந்த அரசனுக்குப் பிறகு இளவரசன் பட்டத்திற்கு வந்தான்.

புது அரசன் நாட்டில் பற்பலசீர்திருத்தங்களைச்செய்தான். எல்லோரும் படித்து அறிவுடையவர்களாகஇருக்க வேண்டும். எங்கும் வறுமைப் பிணி இருக்கக்கூடாது என்று தீர்மானம் செய்து அரசாண்டு வந்தான்.

எத்தனை பெரியவர்களாக இருந்தாலும், படிக்காமலிருந்துவிட்டவர்கள், கட்டாயம் மறுபடியும் பள்ளிக்கூடத்திற்குப் போய் படித்துக்கொள்ள வேண்டும் என்று கட்டளை யிட்டிருந்தான். கல்வி முடியும்வரையில் ஏழைகளுக்கு இனாமாக உணவும், உடையும் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருந்தான்.

படிக்காமல், ஜீவனத்தைத் தேடுவதிலேயே காலத்தைக் கழித்துவிட்ட எத்தனையோ ஏழை மக்கள், அரசனின் புதிய கல்வித் திட்டத்தின் படி படிப்பதற்கு முன் வந்தார்கள்.

தாய் சொல்லைக் கேளாது, படிக்காமல் விளையாடிக் கொண்டே மூடனாகத் திரிந்து கொண்டிருந்த ராமனும், மறுபடியும் பள்ளிக்கூடம் போய் படிக்க வேண்டியதாயிற்று.

ராமனுக்கோ படிப்பதற்கு கொஞ்சங்கூட இஷ்டமில்லை. சுதந்திரமாகத் திரிந்துகொண்டிருக்க வேண்டுமென்றுதான் எண்ணினான். முன்போலவே படிக்காமல் திரிந்தால், புது அரசன் தன்னைத் தண்டித்து சிறையில் போட்டுவிடுவான்



என்பதை அவன் அறிந்திருந்தான்.

ஆகவே, ஒரு நாள் தாய்க்குக்கூட சொல்லாமல் அந்த ஊரை விட்டே போய்விட்டான். போனவன் காட்டு மார்க்கமாக நடந்துகொண்டிருந்தான். நடந்து வந்ததனால் அவனுக்கு அதிக களைப்பு ஏற்பட்டது. இரண்டு மூன்று நாட்களாக சரியானபடி சாப்பிடாததனால், பசியும் காதை யடைத்தது. வழியில் எங்கும் தண்ணீர் தடாகமோ, பழ மரங்களோ அவன் கண்களில் தென்படவேயில்லை. நடுக்காட்டில் அப்படியே சோர்ந்துபோய் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கிவிட்டான்.

அந்தக் காட்டில் ஒரு சாமியார் வசித்து வந்தார். அவர் மிகவும் நல்லவர். யாரிடத்திலும் அன்பு பாராட்டுபவர். அவருடைய ஆசிரமம், ராமன் படுத்திருந்த மரத்திற்கு அருகிலேயே இருந்தது. வெளியே வந்த சாமியார், களைத்து தூங்கிக்கொண்டிருந்த ராமனைப் பார்த்துவிட்டார். அவனைத் தட்டி எழுப்பினார். அவனுக்கு எழுந்து உட்காரக்கூட சக்தியில்லை. அவ்வளவு களைப்பு அவனுக்கு.

சாமியார் அவனை மெதுவாகத் தன்னிருப்பிடத்திற்கு அழைத்துப் போனார். அவனுக்கு வேண்டிய ஆகாரம் கொடுத்தார். அவனும் பசி தீரும் வரை சாப்பிட்டு, தண்ணீர் குடித்தான். அவனுடைய ஆயாசமும் தீர்ந்தது. சாமியார் மட்டும், அவனைப் பார்த்திருக்காவிட்டால் ராமன் மரத்தடியிலேயே பசியினால் செத்துப் போயிருப்பான்.

சாமியாரும் அவனுடைய விருத்தாந்தத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். "நீ, படிக்காமல் இருந்தது தப்புதான். நான் உனக்கு எல்லாம் கற்றுத் தருகிறேன். நீயும் படித்து உன் தகப்பனாரைப்போல் ஆகிறாய் பார்" என்று அவனுக்கு ஆறுதல் கூறினார்.

எல்லாவிதக் கல்விகளையும் கற்றுக்கொடுத்தார். வில் வித்தை முதலிய போருக்கு வேண்டிய வித்தைகளையும் அவனுக்கு கற்றுக் கொடுத்தார். சாமியார் எல்லா சாஸ்திரங்களையும் அறிந்தவர்.

ராமனும் சாமியாருடன் பத்து வருஷங்கள் காட்டில் இருந்து வந்தான். அவரிடம் மிகவும் அடக்கமாகவும், மரியாதையாகவும் நடந்துகொண்டான். அவன் எவ்வளவோ திருந்திப் போயிருந்தான். அவர் சொல்லிக் கொடுத்ததை கவனத்துடன் கேட்டு, எல்லா சாஸ்திரங்களையும் அறிந்துகொண்டான். சாமியாருக்கும் அவனிடத்தில் அதிகப் பிரியம் ஏற்பட்டிருந்தது.

ஒரு நாள் சாமியார் ராமனைப் பார்த்து, 'தம்பி! நான் இமயமலைப் பக்கம் போகிறேன். நீயும் அறிவாளியாகிவிட்டாய். நீ நாட்டிற்குத் திரும்பிப் போவதுதான் நல்லது. போகும்போது சந்நியாசி வேஷத்தோடுதான் போகவேண்டும்' என்று அவனை ஊருக்கு அனுப்பிவிட்டு, அவரும் இமயமலைப் பக்கம் போய்விட்டார்!

வருகிற வழியில் ராமன் தன் நாட்டின்மேல் வேறு ஒரு அரசன் படையெடுத்து வந்திருக்கிறான். இரண்டு படைகளுக்கும் பெரிய சண்டை நடந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்தான். தானும் தன் அரசனுக்கு உதவ வேண்டும் என்று சண்டை நடக்கு

மிடத்திற்கு வேகமாகப் போனான்.

அவன் அங்கு போன சமயம், அவனுடைய நாட்டு அரசன் சண்டையில் காயமடைந்து இறந்து ஒரு நாள் ஆகியிருந்தது. மற்றப்படை வீரர்கள் அரசன் இறந்து போனதனால் தைரியத்தை இழந்திருந்தார்கள். சிலர் எதிரி அரசனுடன் சேர்ந்துவிடுவதற்கு யோசனை செய்துகொண்டிருந்தார்கள். சிலர் பின்வாங்கிக்கொண்டிருந்தார்கள். எதிரி அரசன் இறந்த, அரசனுடைய நாட்டைத் தன் ஆட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டியது தான் பாக்கி.

ஜனங்களுக்குப் பலவிதத்திலும் நன்மை செய்த அரசன் இறந்ததை அறிந்த ராமனுக்கு அழுகை அழுகையாக வந்தது. இருந்தாலும் அழுது கொண்டிருக்க அது நேரமில்லை. உயிரைக் கொடுத்தேனும், நாட்டை எதிரி அரசனிடமிருந்து மீட்க வேண்டுமென்று உறுதி செய்துகொண்டான்.

பின்வாங்கிக்கொண்டிருந்த வீரர்களுக்குத் தைரியங் கூறினான். அடிமை வாழ்விற்கு அவர்கள் ஆளாகக் கூடாது; சுதந்திரம் அல்லது சாவு என்பதை அவர்களுக்கு வலியுறுத்திக் கூறினான். வீரர்களுக்கும் உற்சாகம் பிறந்தது.

சந்நியாசி வேஷத்திலிருந்த ராமனே படைக்குத் தலைமை தாங்கினான். மற்ற வீரர்களும் அவனுக்குக் கீழ்ப்படிந்து சண்டை செய்தார்கள். மறுபடியும் ஒரு பெரிய யுத்தம் அங்கே நடந்தது. எதிரி அரசன் படைகள் தோல்வியுற்று நாலா பக்கமும் சிதறி ஓடின. அந்த அரசனையும் சிறைப்பிடித்துவிட்டார்கள்.

வெற்றியை அளித்த அந்த சந்நியாசியை மரியாதையுடன் நாட்டிற்கு அழைத்து வந்தார்கள். பட்டத்திற்கு வருவதற்கு, இறந்த அரசன் தங்கை இளவரசியைத் தவிர வேறு யாரும் வாரிசு கிடையாது. அவளுக்கோ நாட்டை ஆள்வதற்கு இஷ்டமில்லை.

"அந்த இளஞ் சந்நியாசியே நாட்டை ஆளட்டும். நான் அவரை மணந்துகொள்ளப் போகிறேன்" என்று அரசகுமாரி பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.

அந்த சந்நியாசி, தாய்க்கு அடங்காமல் ஓடிப்போன ராமன்தான் என்பது ஊர் ஜனங்களுக்கு வெகு சீக்கிரத்திலேயே தெரிந்துவிட்டது. அவனுடைய தாயும், தன்னுடைய அடங்காப்பிடாரிப் பிள்ளை, திருந்திப்போய் அரசனாவதுபற்றி அதிக சந்தோஷமடைந்தாள். ராமனும் தன்னுடைய சந்நியாசி கோலத்தை நீக்கிவிட்டான்.

ராமனுக்கும் அரசகுமாரிக்கும் ஆடம்பரமாகக் கல்யாணம் நடந்தது. அதன் பிறகு அவன் அந்த நாட்டிற்கு அரசனாக முடி சூட்டப்பட்டான்.

ராமன் ஆட்சியில் ஜனங்கள் சுகமாக வாழ்ந்தார்கள். எல்லாரும் கல்வி அறிவு படைத்து விளங்கினார்கள்.



மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

பி. ஸ்ரீ.

30

மூன்று வைர மணிகள்

ஒரு காலத்தில் பாண்டிய நாடு வடுகக் கருநாடக மன்னன் ஒருவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. **பார் மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டி நாடு.**

[பார் - பூமி. மன்னு தொன்மை - நிலையான பழமை.]

என்று சேக்கிழார் சொல்லுகிறபடி, ஆதி இன்னதென்று சொல்ல முடியாத தொன்மையும், அந்தத் தொல்புகழ் இடையற்றுப் போகாது நீண்ட காலமாய்த் தொடர்ந்து வந்த பெருமையும் பாண்டிய நாட்டுக்கு உண்டு. பாண்டி நாட்டிலே முன்னுளில் முத்தும் செழிப்பாய்க் கிடைத்தது; முத்தமிழ் என்ற தெய்வத் தமிழும் செழித்து வளர்ந்தது. இந்தத் தமிழ்நாட்டிலும் தலைநகரமாகிய மதுராபுரி 'தமிழ் தங்கிய அங்கண் மூதூர்' (தமிழின் உறைவிடமான அழகிய இடம் அகன்ற புராதன நகரம்) என்று தனிப்புகழ் பெற்றிருந்தது. இந்த நகரைப் பிடித்துக்கொண்டுதான்,

மதுரை வவ்விய
கருநட வேந்தன்

[வவ்விய - அபகரித்த.]

என்று 'கல்லாடம்' என்ற நூலிலும், 'வடுகக் கருநாடர்...மன்னன்' என்று பெரிய புராணத்திலும் குறிக்கப்படும் அரசன், தன் சதுரங்க சேனைகளோடு (யானை, குதிரை, தேர், காலாளுடன்) பாண்டிய நாட்டை ஆக்ரமித்துக் கொண்டான்.

அன்பின் மூர்த்தி வைராக்கிய மூர்த்தி

இந்தப் படையெடுப்புக்கு முன்பே மதுரையில் மூர்த்தியார் என்ற பக்தமணி 'அன்பெனும் மூர்த்தி' யாகவே விளங்கினுர். இவர் மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சோமசுந்தரக் கடவுளுக்கு நாள்தோறும் சந்தனக்காப்பு அணிவதைத் தமது சிந்தைக்கு இனிய திருப்பணியாகச் செய்து வந்தார். பாண்டி நாட்டில் ஆட்சி மாறி,

தண்ணுர் தமிழ் அளிக்கும்
தண்பாண்டி

[தண் ஆர் - குளிர்ச்சி நிறைந்த] அன்னியராட்சிக்கு அடிமைப்பட்டிருந்தும், மூர்த்தியாரின் தொண்டு இடையருது தொடர்ந்து நடந்தது.

அன்னியனுகிய அரசன், அன்னிய சமயமாகிய சமணத்திலும் பிரவேசித்தான். சைவர்களுக்குத் துன்பம் செய்யவும் துணிந்தான். ஆயினும் மூர்த்தியாரின் திருத்தொண்டு தவருது நிகழ்ந்து வந்தது. அரசன் பரம சாதுவாகிய மூர்த்தியாருக்கும் பலகொடுமைகள் செய்யத் துணிந்தான். எனினும், மூர்த்தியார் தம் அன்புப் பணியினின்றும் சிறிதும் வழுவினுரில்லை.

மூர்த்தியாரின் பணிக்குச் சந்தனக் கட்டை கிடைக்க

வொட்டாமலும் செய்துவிட்டான் அரசன். பக்தர்-மனம் நொந்து போயிற்று. ‘இந்தக் கொடுங்கோன்மை வீழ்ந்து, சைவம் வளர்க்கும் நல்லரசு தழைப்பது என்னாளோ?’ என்று துக்கித்த வண்ணம், மூர்த்தியார் பகல் முழுவதும் சந்தனக் கட்டை தேடித் திரிந்தார். எங்கும் கிடைக்கவில்லை. என் செய்வார்? ஏங்கித் திரும்பினார். கோயிலுக்குள் புகுந்தார்:

ஏய்வுற்ற நற்சந்தனம் எங்கும்
பெறாது, சிந்தை
சாய்வுற்றிட வந்தனர், தம்பிரான்
கோயில் தன்னில்

[ஏய்வுற்ற-இசைந்த; தகுந்த.]

கோயிலுக்குள்ளே சந்தனக் கட்டையில்லாமல் வெறுங்கையோடு போனவர், தாம் வழக்கமாய்ச் சந்தனம் அரைக்கும் கல்லைப் பார்த்தார். அந்தச் சந்தனக்கல் ஒரு கற்பாறையிலிருந்து வட்டமாக வெட்டிச் செதுக்கியெடுத்தது. எத்தனை நாள் இடையூறே இல்லாமல் எம்பெருமானுக்குச் சந்தனக் கட்டையை அந்தக் கல்லில் தேய்த்துத் தேய்த்து உரைத்துக் கரைத்து, அந்தச் சந்தனத்தை அணிந்து மகிழ்ந்திருக்கிறார். இன்று என் செய்வார்?

வட்டம்திகழ் பாறையின்வைத்து
முழங்கை தேய்த்தார்,
கட்டும்புறம் தோல் நரம்(பு)
என்பு
கரைந்து தேய!

[புறம் தோல்-வெளித்தோல். என்பு-எலும்பு.]

அந்த வைராக்கியம் கண்டதும், ‘அன்பனே! உன் உறுதிப்பாடு போதும், போதும். இனி நீயே அரசனாகித் தர்மபரிபாலனம் செய்வாய்!’ என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்ததாம். இவர்-கையும் காயம் நீங்கி முன்போல் ஆயிற்றாம்.

அதே இரவில் கொடிய மன்னன் இறந்துபோனான். அவனுக்குப் புதல்வர் இல்லை. எனவே, மந்திரிமார், ஒரு யானையைக் கண் கட்டி விடுவோம்; அந்த யானை எவரை எடுத்துக்கொண்டு வருகிறதோ ‘அவரை அரசராக்கி விடுவோம்’ என்று தீர்மானித்தார்கள். யானை பட்டணத்து வீதிகளிலே சுற்றித் திரிந்து, சொக்கநாதப் பெருமானின் கோபுரத்துக்கு முன்னே சென்றது.

அங்கே மூர்த்தியார் நின்றார். யானை தாழ்ந்து அவரை எடுத்துப் பிடரியில் வைத்துக்கொண்டதாம்.

மூர்த்தியார் பாண்டி மன்னரானார். விபூதியைக்கொண்டே பட்டாபிஷேகம் செய்துகொண்டார். ருத்திராட்சத்தையே ஆபரணமாக அணிந்துகொண்டார். பொன்முடிக்குப் பதில் ஜடைமுடி தரித்து, அத்தாணி மண்டபத்திலே இரத்தினச் சிங்காசனத்தின் மேல், முத்துக் குடையின்கீழ் வீற்றிருந்து ஆட்சி செலுத்தினார் மூர்த்தி நாயனார்.

வேறொரு வைராக்கிய மூர்த்தி

பசுபதி நாயனாரும் ஒரு வைராக்கிய மூர்த்திதான். இவரும் சிவ பக்தியையே செல்வமெனக் கொண்டவர். **ஸ்ரீ ருத்திரம்** என்ற வேத மந்திரத்தை ஓதுவதில் இவருக்குப் பெருவிருப்பம். ஒரு தாமரைத் தாடகத்திலே கழுத்தளவு நீரில் நின்று, அல்லும் பகலும் ஸ்ரீருத்திரம் ஓதிச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தார். இந்த நிலையில் சில நாள் சென்றதும், சிவபதம் அடைந்தாராம்.

ஸ்ரீருத்திரத்தில் இத்தகைய மகா விசுவாசம் கொண்டிருந்த இவரை உருத்திர பசுபதி நாயனுர் என்று போற்றுகிறது சைவ உலகம்.

இன்னெரு வைராக்கிய மூர்த்தி

காஞ்சீபுரத்திலே வண்ணர் குலத்தில் **திருக்குறிப்புத் தொண்டர்** என்ற ஒரு பக்தர் இருந்தார். சிவனடியார்களுடைய குறிப்பை அறிந்து, அவர்களுக்குத் தொண்டுசெய்து வந்ததால் இவருக்குத் 'திருக்குறிப்புத் தொண்டர்' என்று பெயர். ஆடை வெளுத்துக்கொடுக்கும் குலத்தொழில் செய்து ஜீவனம் செய்துவந்ததால், இவர்சிவனடியார்களுக்கு ஆடை வெளுத்துக் கொடுப்பதையே தொண்டாகச் செய்து வந்தார்.

இப்படி நடந்து வருகையில், குளிர்காலம் வந்தது. ஒரு நாள் அடியவர் ஒருவர் மெலிந்த மேனியோடும் அழுக்கேறிய கந்தையோடும் இந்தத் தொண்டரிடம் வந்து சேர்ந்தார். அந்தத் தொண்டரைக் கண்டதும் திருக்குறிப்புத் தொண்டர், 'கந்தையைத் தந்தருளும், வெளுத்துத் தருகிறேன்' என்று வேண்டிக்கொண்டார். அவரோ, 'இது வெளுக்கவேண்டியதுதான்; குளிரின் கொடுமையால் இதைக் கொடுக்கவும் மனம் வரவில்லை. பொழுதுபோவதற்குள் வெளுத்துக் கொடுக்க முடியுமாஞல் கொண்டுபோம். அப்படி வெளுத்து இதை உலர்த்திக் கொடுக்கவில்லையென்ருல்,

இந்த உடற்(கு) இடர் செய்தீர்!

ஏனென்ருல் 'இவ்வுடலுக்குக் குளிரால் துன்பம் அதிகரிக்கும்' என்று சொல்லிக் கந்தையைக் கொடுத்தார். திருக்குறிப்புத் தொண்டர் இசைந்து, அதை வாங்கிக்கொண்டு போஞர். ஆஞல், இந்தப் பணி நிறைவேறவில்லை.

மேகங்கள் பளிச்சென்று திரண்டெழுந்தன. சோ வென்று மழை

கொட்டத் தொடங்கியது. தொண்டர் என் செய்வார்? சிவனடியாருக்கு அளித்த வாக்கை நினைத்து வருந்திஞர்.

'செழுந்தவர்தம் திருமேனி
குளிர்காணும் தீங்கிழைத்த
தொழும்பனேற்(கு)இனி இதுவே
செயல்' என்று துணிந்தெழு
[வார்!

[செழுந்தவர்—செழித்த தவத்தையுடைய சிவனடியார். தொழும்பனேற்கு-அடியேனுக்கு]

அந்த நிலையில் இந்தத் திருக்குறிப்புத்தொண்டர் செய்ததென்ன? 'அடியவர் குறிப்பிட்ட காலவரையும் கழிந்துவிட்டதே! முன்னமே இதை வெளுத்து வீட்டில் காற்றிலே உலரும்படி கட்டிவைத்தேனில்லையே! அந்த மெலிந்த மேனியைக் குளிரால் வருந்தச் செய்த மகா பாவியானேனே!' என்று புலம்பிக்கொண்டே வஸ்திரம் வெளுக்கும் கற்பாறையில் தலையை மோதிஞர்.

அங்கேயே ஒரு கை தோன்றி நாயனுரைப் பிடித்துக்கொண்டதாம். சோதனையில் ஜெயித்துவிட்டார்! மழை ஒழிந்து பூ மழை பொழிந்ததென்றும், அந்தப் பூ மழைக்கிடையே சிவபெருமான் அருள்வடிவமான அம்மையோடு காட்சி கொடுத்தாரென்றும் பெரிய புராணம் சொல்லுகிறது.

வான் நிறைந்த புனல்
மழைபோல்
மலர் மழையாய்,
இடமருங்கு
தேன் நிறைந்த
மலர் இதழ்த்
திருமுடியார்
பொருவிடையின்
மேல்நிறைந்த
துணைவியொடும்
வெளி நின்ருர்; மெய்த்
தொண்டர்
தாம் நிறைந்த
அன்புருகக்
கைதொழுது
தனிநின்ருர்.

[புனல்- தண்ணீர். இடமருங்கு- இடதுபக்கத்தில். இதழி- கொன்றை. பொருவிடையின் மேல்- ரிஷபத்தின்மேல்: ரிஷபாரூடராய். துணைவி- உமையம்மை. வெளி நின்ருர்- காட்சி கொடுத்தார். மெய்த்தொண்டர்-(இங்கே) திருக்குறிப்புத் தொண்டர்.]

எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாஞலும் பக்தி, வைராக்கியங்களில் முதிர்ந்தவர்களே பக்த குலத்தினர் என்பது இத்தகைய கதைகளின் படிப்பினை.

இம்மூன்று வைராக்கிய மூர்த்திகளையும் மூன்று வைரமணிகள் என்று சொல்லலாம். இவர்களுடைய பக்தி நிறைந்த நெஞ்சிலே ஈரமும் வைரமும் ஒருங்கே இசைந்திருந்தன.

ராமநாதன் வக்கீல் விச்வநாதையரிடமிருந்து செக்கை வாங்கிக்கொள்ள ஆவலுடன் விரைந்து சென்றான். மாமா சிவராமன் அதுவரை அங்கு வரவில்லை என்று தெரிந்துகொண்டான்.

விச்வநாதையர் செக், ஒரு வாரம் தள்ளித் தேதி போட்டுத் தன்னிடம் கொடுக்கப்பட்டிருப்பதாயும், அதற்குள் ராமநாதன் தன் மாமாவை வழிக்குக் கொண்டுவந்து ரூ. 5000-த்தையும் வாங்கித் தரவேண்டுமென்றும் அது சாத்தியமாகாவிட்டால், வியாஜ்யம் தொடரும்படி அழகிரிசாமி தனக்கு இன்ஸ்டிரக்ஷன் கொடுத்திருப்பதாயும் சொன்னார்.

ராமநாதன்:—"ஆனால் அந்த ஆயிர ரூபாய் செக்கை இப்போது என்னிடம் கொடுக்கும்படியாக அழகிரி சொல்லவில்லையா?"

வக்கீல்:— "இல்லை"

ராமநாதன்— "நான் மாமாவை அழகிரி இஷ்டப்படி வழிக்குக் கொண்டுவராவிட்டால் எனக்குச் செக் கொடுக்கப்படமாட்டாது போலும்!"

வக்கீல்:— "ஆமாம்"

ராமநாதன் :— "இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? மாமா போக்கிற்கு நானா ஜவாப்தாரி? இந்தப் பணம் எனக்கு வரவேண்டியதுதானே?"

வக்கீல்:—அது எனக்குத் தெரியாது.

ராமநாதன்:—"செக்கை நீங்கள் என்னிடம் கொடுத்துவிட்டால் அழகிரி என்ன செய்வான்!"

★

வக்கீல் ;—"உன்னிடத்தில் நான் இந்தச் செக்கைக் கொடுத்தாலும் அது உனக்குப் பிரயோசனப்படாமல் செய்துவிட அழகிரியால் முடியும்."

ராமநாதன்:—"அழகிரியால் எதுவும் செய்ய முடியும்—"

வக்கீல் சிரித்துக்கொண்டார். ராமநாதன் ஆத்திரத்துடன்—ஆகையால் இந்தச் செக் மாரீசன் மாயையான 'தங்கமான்' என்று சொல்லுங்கள்."

வக்கீல்:— புன்சிரிப்புடன்-"ஆமாம். உஷாவும் அப்படித்தான்."

ராமநாதன்:—"ஆனால் உண்மையில் உஷாவை எனக்குக் கொடுக்கும் உத்தேசமும் அழகிரிக்கு இல்லை என்று சொல்லுங்கள்."

வக்கீல்:—"போகப் போகத் தெரியும்."

ராமநாதன்:—"இப்போதே தெரிகிறதே சரி நான் போய் வருகிறேன்."

வக்கீல்:— "நல்லது."

ராமநாதன், போகமனமில்லாமல், - "நீங்கள் எப்படியாவது மதியஸ்தம் பண்ணி விடுவதாய்ச் சொன்னீர்களே!"

வக்கீல்:—"நான் இரண்டும் மனுஷ்ய உருவங்கள் என்று நினைத்தேன். ஆனால், அதில் ஒன்று நிழல்— உருவத்தின் தொடர்பில்லாத நிழல்! அதன் பின் ஓடி ஓடிப் பார்த்தேன். அதைக் காலால் மிதிக்கவும் முடியவில்லை. கையால் பிடிக்கவும் முடியவில்லை. அதுகள், முள், மரம், செடிகளில் சிக்கிக்கொள்வதுமில்லை. ஆகையால், அந்த வேட்டை அசாத்தியமென்று விட்டு விட்டேன்,"

ராமநாதன்:—"ஆனால் அந்த நிழலுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு என் மாமாமீது ஜீவனாம்ச வியாஜ்யம் தொடரப் போகிறீர்கள்?"

வக்கீல்:— ஆத்திரப்படாதே, ராமநாதா! நான் அந்த வியாஜ்யத்தில் சாட்சியாகவரக்கூடுமாதலால், அழகிரிக்கு வகாலத்து வாங்கிக் கொள்வது நிச்சயமில்லை.

ராமநாதன்:—"என்ன சாட்சி?"

வக்கீல்:—"உன் மாமாவுக்கும் அழகிரிக்கும் ஏற்படப் போகவிருந்த ஒப்பந்தத்திற்கு நான் "டிராப்ட்" எழுதினேன் அல்லவா?"

ராமநாதன்:—"அந்த டிராப்டை என்ன செய்தீர்கள்?"

வக்கீல்:—"வைத்திருக்கிறேன். இரு கட்சிக்காரர்களிடமும்அதைக் கொடுக்கமாட்டேன்."

ராமநாதன்:—"என் செக்கை என்ன செய்யப் போகிறீர்கள்"

வக்கீல்:—"அதுவும் என்னிடமே இருக்கும்."

ராமநாதன்:—"நான் அழகிரி பேரில் கிரிமினல் கேஸ் தொடர்ந்தால், அதையும் அது உங்களிடம் வந்த விவரத்தையும்பற்றி நீங்கள் என் பக்கத்தில் சாட்சி சொல்லலாமல்லவா?"

வக்கீல்:—"அதற்கென்ன பிற்பாடு யோசித்துக்கொள்வோம்."

ராமநாதன்:—"மாமாவை நான் இங்கு அனுப்பட்டுமா?"

வக்கீல்;— "அவசரமில்லை. பார்த்துக்கொண்டு மேல் நடவடிக்கை எடுக்கலாம்."

* * * * *

ராமநாதன் வீட்டிற்கு வந்ததும் மாமாவிடம் விருத்தாந்தங்களை ஒப்பித்தான்.

சிவராமன், "அழகிரி ஒரு முதலை" என்றார்.

ராமநாதன், "அவன் ஒரு மாரீசன்" என்றான்.

இருவரும் சற்று மௌனமாய் ஆலோசனையில் ஆழ்ந்தார்கள்.

ராமநாதன் மாமாவைக் கேட்டான்—"ஆனால், அழகிரி நீங்கள் உஷாவை வீட்டில் அழைத்து வைத்துக்கொள்வீர்களா என்று கேட்கிறானே! அது சரியான கேள்விதானே? அப்படியானால் நீங்கள் உஷாவுக்குச் சரீரப் பாது காப்பு கார்டியன் ஆக எப்படி இருக்க முடியும்?."

சிவராமன்:—"அடே போடா பைத்தியமே! அவன் சொன்னான் என்று நீயும் கேட்கிறாயே! நான் அவளுக்கு கார்டியனாவது உனக்கு அவளை உடனே விவாஹம் செய்து கொடுப்பதற்குத்தானே? நடுவில் பத்து, இருபது தினங்கள் அவள் தங்கவேண்டுமென்றாலும் எனக்கு அவளை வைத்துக் காப்பாற்ற இடமா இல்லை? விவாஹமானால் உன்னிடம் இருந்துவிடுகிறாள் அல்லது முதலிலேயே உங்களுக்கு ஒரு ஜாகை ஏற்பாடு செய்துவிட்டால்? நான் கார்டியன் என்பது பேச்சுக்கு. உன்னிடம் அவளை உடனே ஒப்புவித்துவிட வேண்டியதற்குத்தான்நான் கார்டியன்."

ராமநாதன்:—"அழகிரி இதே மாதிரி பேசினான். என்ன வஞ்சகம்! வக்கீல் சொன்னார்—'உஷாவையும் இந்தச் செக்கைப்போல் உன்னை ஏமாற்ற முன் தோற்றுவிக்கிறானே ஒழிய, உனக்கு அவளை உண்மையில் கொடுத்து விவாஹம் செய்துவைக்கும் உத்தேசம் கிடையாது என்று."

சிவராமன்:—"அதற்கென்ன சந்தேகம்! எனக்கு அது முதலிலேயே தெரியும். அவளை சினிமா கண்டிராக்டில் மாட்டிவிட என்ன முடை?"

ராமநாதன்:—"இன்று காலையில் அவள் வீட்டிலில்லை. கேதார நெல்லூர் பொன்னுசாமி பிள்ளையாம், ஒருவர்—"

சிவராமன்:—"ஆமாம். அழகிரிக்கு மச்சினன் முறை—"

ராமநாதன்:—"அவருடன் பத்மா, உஷா முதலியவர்கள் எங்கேயோ போனார்களாம்."

சிவராமன்-"சரிதான். அந்தக் கிழவன் வந்திருக்கிறானா? அவன் ஏதோ பரத நாட்டிய ஸ்கூல் ஒன்று ஆரம்பித்திருப்பதாய் கேள்வி. பரத நாட்டியம் இந்தக் காலத்தில் சம்பாத்தியத்திற்கு நல்ல வழியல்லவா!"

ராமநாதன்:—"இதற்கு மேல் யோசனை என்ன மாமா! நான் ஒரு கிரிமினல் கம்ப்ளெயிண்டும், நீங்கள் ஒரு கார்டியன் மனுவும் கொடுக்க வேண்டியது அவசியம் தானே!"

சிவராமன்:—"ராமநாதா! ஒன்றும் இப்போது முடியாது-"

ராமநாதன்-"அவன் உங்கள் பேரில் ஜீவனும்சு வியாஜ்யம் தொடுப்பது நிச்சயம்-"

சிவராமன்:—'தொடுக்கட்டும். அதற்குமேல் யோசித்துக்கொள்வோம். அப்படித்தானே வக்கீல் விச்வனுதையரும் சொல்லியிருக்கிறார்?"

ராமநாதன்:—"அதுவரையில் உஷா-?"

சிவராமன்;—"இருக்கிற இடத்தில் இருக்க வேண்டியதுதான்.

ராமநாதன்:—"ஆனால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

சிவராமன்:—"நான் உன் அப்பாவைப் பார்த்துவிட்டு இன்று சாயங்காலமே முடிந்தால் செல்லத்தை அழைத்துக்கொண்டு ஊருக்குப் புறப்படப் போகிறேன்."

ராமநாதன்:—"அப்பா இன்றைக்குள் வந்தால்தானே?

சிவராமன்:—"இன்றைக்குத்தான் வருகிறார். ஸ்டேஷனுக்குக் கார் போயிருக்கிறது."

ராமநாதன் "கடிதம் வந்ததா?"

சிவராமன்:—"ஆம்: கடிதம் வந்தது. அதனால், தான் நான் காலையில் வக்கீல் வீட்டிற்குப் புறப்படவில்லை. கோமதி, கோபிநாத் எல்லோரும் வருகிறார்கள்."

ராமநாதன்:—"நீங்கள் ஏன் ஊருக்குப் போகவேண்டும்!"

சிவராமன்;—"காந்திமதி கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. செல்லத்திற்கு நான் வரன் பார்க்க வேண்டாமா? அவளை ஊருக்கு அழைத்துவரும்படி அவள் தாயார் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறாள். செல்லமும் ஊருக்குப் புறப்பட ஆயத்தமாயிருக்கிறாள்."

ராமநாதன்:—"காந்திமதி கல்யாணத்தைப்பற்றியும் இன்று வந்த லெட்டரில் எழுதியிருக்கிறாரா? வரன் யார்? ஜகன்னாத்தானா! கடிதம் எங்கே?"

சிவராமன்:—"ஆம்! கடிதம் உன் அம்மாவிடமிருக்கிறது."

ராமநாதன்:—"அப்பா வந்தால் எனக்கு ஒரு கடுமையான விசாரணை கட்டம் ஏற்படுவது நிச்சயம். நான் எங்கேயாவது ஓடிப்போய் விடட்டுமா, மாமா! அழகிரியிடம் சரணாகதியடைவதில் பிரயோஜனமில்லை. அதைவிட முதலை வாயில் பிரவேசிக்கலாம். நான் என்ன செய்வது, மாமா! நீங்களாவது எனக்கு?"

சிவராமன்;—'அட, அசடே! ஏன் பயப்படுகிறாய்? 'இதைவிடக் கடும் குற்றம் செய்த பிள்ளைகளை எல்லாம் தகப்பனார்கள் மன்னிப்பதில்லையா என்ன? பதைபதைக்காதே! என்ன நடக்கிறது பார்ப்போம்?

ராமநாதன்:—என்ன நடக்கும்! எனக்கும் ஒரு பெண் பார்த்துக்கொண்டு வந்திருப்பார்."

சிவராமன்—: "அப்படியானால் என்ன குறை? பெரியவர்கள் சொல்படி நட—அதோ கார் சப்தம் கேட்கிறது.எப்போதும்போல் குஷியாய் இரு. சமயத்தில் நான் உன்னைக் கைவிடமாட்டேன் என்பதை நம்பு. ஆடு திருடினவன் மாதிரி விழிக்காதே! உன் அக்காவும் அத்திம்பேரும் வருகிறார்கள். உன் தங்கைக்குக் கல்யாணம். நீ வீட்டில் இளவரசன். ராமநாதா! என்னைப் பார்–! தலையைத் தொங்கப் போடாதே! உஷா எங்கும் ஓடிப்போய் விடமாட்டாள்: சோகம் வேண்டாம்! பயம் வேண்டாம்"

கேட்டிற்குள் நுழையும்போது "பாம்" என்று கார் அதி குதூகலத்துடன் ஒரு சப்தம்போட்டது. ராமநாதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சிவராமன்—"இறங்கி வா ராமநாதா! அழுகைக்குறி வேண்டாம்! ஜாக்கிரதை" என்று எச்சரித்துக்கொண்டு துள்ளி எழுந்து கீழே ஓடினார்.

* * * *

ஸ்ரீமான் வேங்கிடசுப்பையரின் வரவால் வீட்டில் கோலாகலமாயிருந்தது. சங்கரி அம்மாள் முகமலர்ச்சியுடன் மூத்தபெண்ணை வரவேற்றாள். செல்லமும் காந்திமதியும் குழந்தை ராதாவுடன் பேசி விளையாடி மகிழ்ந்தார்கள். கோபிநாத்திடம் சிவராமன் பேசலானார். ராமநாதன் அத்திம்பேர் சிச்ருஷையில் சிரத்தை எடுத்துக்கொண்டான்.

வேங்கிடசுப்பையர் எப்பொழுதும்போல் ராமநாதனிடம் நடந்துகொண்டதால், அவன் நிமிஷத்திற்குநிமிஷம் தேறுதல்அடைந்து, ஸ்வபாவநிலைமையில் எல்லோருடனும் கலந்துகொண்டான். வீட்டில் விருந்து உபசாரம் பலமாய் நடந்தது. அன்று மதுரப் பாட்டிக்கு வேலை ஜாஸ்திதான். ஆனால், பாட்டியிடம் ஒரு குணம் உண்டு. ஜனங்கள் வருவதிலும் குதூகலமாயிருப்பதிலும் பாட்டிக்கு அருவருப்புக் கிடையாது. விசேஷ வரவேற்புக்கள்நடந்தால், அவைகளில் உத்சாகமாக வேலை செய்து, இனிய பண்டங்

களைத் தயார் செய்வதில் அவள் அலுத்துக்கொள்ள மாட்டாள். கல்யாணம், மாப்பிள்ளை, அழைப்பு, விருந்து என்றால் அவளுக்குக் கொண்டாட்டம்.

மத்தியானம் டிபன் அமர்க்களம் எல்லாம் அமிர்தமாய் அமைந்திருந்தது.

பின்பு ராதாவின் பரத நாட்டியக் கச்சேரி. குழந்தைக்குப் பின்னை மரத்தின்கீழ் புல்லாங்குழல் வாசிக்கும் கிருஷ்ணனைப்போல நிற்கத் தெரியும். இன்னும் இரண்டொரு சமிக்ஞைகள். இவ்வளவுதான். இது ஒரு மணி நேரம் அப்ளாஸ்களுடன் நடந்தேறியது. மதுரப்பாட்டி போட்டோக்காரனை வரவழைக்க வேண்டுமென்றாள். சங்கரி, 'திருஷ்டியாய் போய் விடும்' என்றாள். கோமதி குழந்தை சங்கோசத்தினால் சரியாய் செய்யவில்லை என்றும் இன்னும் எவ்வளவோ விதரணையாக நடத்துவாள் என்றும் உறுதி கூறினாள். கோபிநாத், தான் ராதாவின் சாமர்த்தியம் இவ்வளவு என்று அதுவரைதெரிந்துகொள்ளவில்லை என்றும் உத்யோகப் பொறுப்புகளினால் வீட்டில் தங்குவதே கிடையாதென்றும் பெருமையுடனும் சலிப்புடனும் சொல்லிக்கொண்டார். ஸ்ரீமான் வேங்கிட சுப்பையர் குழந்தைக்குக் கைகால்களை வலிக்கும் என்றும் உடனே தூங்கப் பண்ணுவது நலமென்றும் அபிப்பிராயப் பட்டார். சிவராமன் தன் பெண் உஷாவை நினைத்துக்கொண்டு ஒரு பெருமூச்சு விட்டார். அந்த பரதநாட்டியம் இந்தப் பாடு படும் போது அவள் பராதீனமாய், அனாதையாய் இருக்கவேண்டியது ஏன் என்று அவர் மனதில் ஒரு எண்ணம் கல்லை வைத்து நெருடுவது போல் வேதனை தந்தது. கோபிநாத் ராமநாதன் படிப்பைப்பற்றி அவனைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஸீதாராமனைப் பற்றியும் அவர் விசாரித்தார். தாத்காலிகமாய் திருப்தி தரக் கூடிய சாமர்த்தியமான பதில்கள் அளிக்கப்பட்டன.

அன்று ஞாயிற்றுக்கிழமையானதால், டவுனில் விசேஷக் கச்சேரி புரோக்ராம்கள் இருந்தன. பெரும்பாலோர் ஸங்கீதத்திற்கும் சிலர் சமுத்திரக்காத்து வாங்கவும் சாயங்காலம் புறப்பட்டார்கள்.

(தொடரும்)



501 ஸோப்பால்
வெளுக்கப்பட்டது.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தேவை

கீழ் குறிப்பிட்டுள்ள இடத்தில் எமது மித்திரன் தினசரி, வாரப்பதிப்பு முதலியவைகளை விற்பனை, பட்டுவாடா செய்ய ஊக்கமுள்ள ஏஜண்டுதேவை. விண்ணப்பதாரர் உள்ளூர் வாசியாகவும், செக்யூரடி கட்டக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். விருப்பமுள்ளவர் அடியில்கண்ட விலாஸதாருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

கொழும்பு:

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன், விக்டரி ஹவுஸ்,
மௌண்ட்ரோட், சென்னை 2,

காஷ்மீர்-குஸும்
என்ற மலர் மூலிகையை
கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்

M.P.&Co.
ஸான்டலக்ஸ்
நறுமண சந்தனக் களிம்பு
தீப்புண், வெட்டு, சொறி, புண்களுக்கு (கூடிவர உதவி)

M R ஜெட்டப்பா அவர்களின்
பிரேமலீலா
மைசூர் ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர், அம்பர்

ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதராஸ்.

நம்பிக்கை பெற்ற
நஞ்சன்கூடு
மருந்துகளை
உபயோகிக்கவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.





ஸ்டிரப்டோமைஸின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஒருவர் சத்திர சிகிச்சையின்போது அணிந்துகொள்ளும் 'கிளவ்ஸ்'களுடன் மேற்படி மூலிகையின் எடையைச் சோதிக்கிறார். இம்மாதிரி அடிக்கடி சோதனை செய்யவேண்டுமாம். (வலது) இம்மருந்து அடக்கம் செய்யப்பட்ட சிமிழ்களை 'பாக்' செய்பவர்களைக் காட்டும் படம்.

'ஸ்டிரப்டோமைஸின்'

(க்ஷயரோகத்தைக் குணப்படுத்தும் புது ஔஷதம்)

நோயாளியின் உடலில் க்ஷயரோகம் வேரூன்றிவிட்டால், அதைக் குணப்படுத்துவதில் வெறும் மருந்துகளோ அல்லது முற்போக்கான சத்திர சிகிச்சைகளோ பலனளிக்க முடியாது. க்ஷயரோகம் சம்பந்தப்பட்டமட்டில் நேற்று வரை இந்த நிலைமை தான் இருந்து வந்தது. ஆனால், இன்றோ அந்நிலைமை முற்றிலும் மாறியிருக்கிறது. நீண்டகால ஆராய்ச்சிகளுக்குப் பின்பும் சோதனைகளுக்குப் பின்பும் க்ஷயரோகத்தைக் குணப்படுத்துவதற்கு ஸ்டிரப்டோமைஸின் (Streptomycin) என்ற ஒரு புதுவித வாக்ஸீன் (Vaccine) கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. முற்பட்ட வியாதிகளையும் குணப்படுத்த முடியுமென்ற ருசு இப்புது ஔஷதத்திற்கு ஸ்திரமாவதற்குப் போதிய அத்தாட்சிகள் கிடைக்கச் சிறிது காலம் பிடிக்குமென்றாலும், க்ஷயரோகத்தால் அல்லலுறும் நோயாளிகளின் உள்ளத்தில் நம்பிக்கை ஏற்படச் செய்வதற்குப் போதுமான குறிப்புகள் ஏற்கனவேயே கிடைத்துவிட்டன.

பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சிக் கவுன்ஸிலினால் நடத்தப்பட்ட

★

ஆரம்ப பரிசோதனைகளின் பலன்கள் க்ஷயரோகம், மெனின்ஜைடிஸ்-அதாவது மூளையிலுள்ள ஜவ்வுகள் வீங்குவதால் ஏற்படும் நோய்-முதலிய நோய்களால் கஷ்டப்படும் நோயாளிகளுக்கு இப்புது ஔஷதம் சிகிச்சைபெறச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை பலப்படுத்தியுள்ளன.

க்ஷயரோகம் ஒன்றிற்கு மட்டும் தான் ஸ்டிரப்டோமைஸின் குணமளிக்கிறதோவென்று யாரும் நினைத்துவிட வேண்டாம். கடந்த பல நூற்றாண்டுகளாக மனித சமூகத்தை அடிக்கடி வாட்டி வருவதும் 1907-ம் வருடத்தில் மட்டும் இந்தியாவில் பத்து லக்ஷத்திற்கு மதிகமான மக்களைப் பலி கொண்டதுமான பிளேக், இதைப்போன்ற இதர கொள்ளை நோய்களும் ஸ்டிரப்டோமைஸின் மருந்தைக் கொண்டு தற்போது வெற்றிகரமாகவே குணப்படுத்தப்படுகின்றன.

இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் ஸ்டிரப்டோமைஸின் தயாரிப்பின் பல்வேறு கட்டங்களை விவரிப்பதுமான இப்படங்கள் கிளாக்ஸோ ரசாயனசாலைகளுக்குச் சொந்தமான கிரீன்போர்ட் தொழிற்சாலையில் எடுக்கப்பட்டவை. 1944-ம் ஆண்டு டாக்டர் வாக்ஸ்மேன் என்பவரும் அவருடைய இதர சகாக்களும் இப்புது ஔஷதத்தைக் கண்டுபிடித்தது முதல் பிரஸ்தாப ரசாயன ஸ்தாபனம் அதன் ஆராய்ச்சியிலும் தயாரிப்பிலும் அதிக ஆர்வம் கொண்டிருக்கிறது. கடந்த சில காலமாக இதற்கென அமைக்கப்பட்ட முதல் இயந்திரம் இப்புது ஔஷதத்தைத் தயாரித்து வருகிறதென்றாலும், சமீபத்தில்தான் உலக தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பெரும் அளவில் உற்பத்திச் செய்வதற்கான முறை கண்டுபிடிக்கப்பட்டது. இம்முறை தான் தற்போது இத் தொழிற்சாலையில் கையாளப்பட்டு வருகிறது. லங்காஷயரிலுள்ள அல்வர்ஸ்டனில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய தொழிற்சாலை பிற்காலத்தில் இம்மருந்து உற்பத்தியையொட்டி விஸ்தரிக்கப்படலாமெனவும் நம்பப்படுகிறது.

பிரசித்தி பெற்ற

"காஸினோ"

முகப்பவுடர்

உங்கள் முகத்தை பொலிவுடன் பிரகாசிக்கச்செய்கிறது.

வாங்கும்பொழுது காஸினோ மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO., 5, ACHARAPPAN ST., G.T. MADRAS 1.

எஸ். எம். டி. வேலு அண்டு கோ.,

சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணெயில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட்	ரூ. 2-0.	8.	ரோஜா செண்ட்	ரூ. 1-8.
2.	கியோரா	,, 2-0.	9.	சுரங்கி	,, 1-8.
3.	காஸ்	,, 2-0.	10.	வில்வி	,, 1-0.
4.	போகுல்	,, 1-8.	11.	லோடஸ்	,, 1-0.
5.	ஜாஸ்மின்	,, 1-8.	12.	ஆரஞ்சு	,, 1-0.
6.	கதம்பம்	,, 1-8.	13.	மோதியா	,, 1-0.
7.	ஹேனு	,, 1-8.	14.	கோலோன்	,, 1-0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S W.) 4, Hospital St., **Calcutta 13.**

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம் ,, ரூ 2.

மூன்றும் பாகம் ,, ரூ. 2.

(தபால் செலவு அணா 10.)

முன்பணம் அனுப்பவேண்டும். **V. P. P.** அனுப்புவது கிடையாது

மானேஜர் : "சுதேசமித்திரன்" புத்தகசாலை, விக்டரி ஹவுஸ் மவுண்ட்ரோட், சென்னை.

மதனமஞ்சரி

மாத்திரைகள்.

தேக புஷ்டியின்மை, மலச்சிக்கல் முதலிய நோய்களை நீக்கி, ரத்த விருத்தியும், தேக புஷ்டியும் அளிப்பது. டப்பா விலை ரூ. 1-4-0.

ரமணவிலாசினி

வாழ்க்கையை நன்கு அனுபவிக்க டப்பி ரூ. 1-4-0.

கர்ப்பாமிருத சூர்ணம்

ஸ்திரீகளின் நோய்களை நீக்கி, புத்திர சந்தானம் பெற உதவியளிக்கும் ஔஷதம். டின் விலை ரூ. 2-8-0.

சேலம் : மாடர்ன் ஸ்டோர்ஸ், முதல் அக்ரஹாரம்.

கோயமுத்தூர் : T. S. கருப்புசாமிசெட்டியார் & ஸன்ஸ்.

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர் கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனு பஜார், சென்னை.

தேவாம்ருதம்

"பீம-வீர்"

சாஸ்வத சக்தியை கொடுக்கும்

RESTORES MAN HOOD



देवामृतम

'भीम-वीर'

शाश्वत शक्ति देनेवाला है

MAKES MEN YOUNG

Nector of Life

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4

Lovely long hair



100% மருந்து பூர்வமானது: வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St.,
Royapuram, Madras.

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்
"சுதேசமித்திரன்" புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஓரே வேளையில் உடல்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப்பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன்

50 வேளை ரூ. 25.

வைத்தியபதி ***R. M.*** ***நாராயணசாமி பிள்ளை,***

தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

சக்தி ஆருடம்!

சென்னை சர்க்கார் விவசாய இலாகா டிப்டி டைரெக்டர் (Retd) Sri M. A. பாலகிருஷ்ணன் L. Ag., M. A. S., சிவகங்காவிலிருந்து 21-10-48ல் எழுதுகிறார்:—

"தங்களுடைய ஆருடம் பலித்தது. மறுபடியும் தங்களை அணுகத் துணிந்தேன்." 3 கேள்விகளுக்கு ரூ. 1, மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—0. வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணெய் - கஸ்தூரிகுங்குமப்பூ - கோரோஜனம் – ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து – பஞ்சாப்தேன் - முத்து பன்னீர் – ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,

45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. மதருஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

RAHAMATH PHARMACY

(Estd 1925)

55, Parish Venkatachala Iyer St, G. T., Madras.

சகல வியாதிகளுக்கும் கைமேல் பலன் தரும் யூனானி ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்யுமிடம்.

உத்தரவாதம் கொடுத்து ஆஸ்த்மா, ஈளை, சுவாச இருமல், சகல மேக வியாதிகள், குன்மம், சூதகவலி, சூதக கோளாறுகள், ரத்த மூலம், படை, சர்ம வியாதிகள் இவைகளுக்கு கைகண்ட யூனானி சிகிச்சை.

அநேக நற்சாட்சிகளை நேரில் பார்வையிடலாம்.

பரீக்ஷியுங்கள்.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத் தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.

வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,

34, சாந்தோம், சென்னை 4.

எந்த வியாதியையும் குணப்படுத்தும் சிறந்த மருந்து; கைதேர்ந்த சிகிச்சை.

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியரின்

ஆரிய வைத்தியாச்ரமம்

குமரன் வீதி, **திருப்பூர்.** பிராஞ்சு:- பல்லடம்.

வெளியூர் வாசிகள் நோயின் நிலைமையை விவரமாக எழுதினால், தகுந்த சிகிச்சை தெரிவிப்பதுடன், மருந்துகளும் ரெயிலில் அல்லது தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியர் பிரதி திங்கட்கிழமை பல்லடம் பிராஞ்சுக்கு வந்து முக்கியமான கேசுகளைப் பார்ப்பார்.



ஸ்டாகிஸ்டுகள்:—

(1) மெஸர்ஸ் ஆல்பட் & கோ., 182, மவுண்ட்ரோட், மதராஸ்.
(2) மெஸர்ஸ் மில்டன் & மில்லர், 1/157, பிராட்வே, மதராஸ.
(3) மெஸர்ஸ் ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி.



Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press. Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

சூரஜ்மல்ஸ்
வைரங்கள்
313. நேதாஜி ரோட், சென்னை.